# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2022–2023

# செய்தி மற்றும் விளம்பரம்

**மானியக் கோரிக்கை எண்.28**

**மு.பெ.சாமிநாதன்**

**செய்தித் துறை அமைச்சர்**

## மானியக் கோரிக்கை எண்: 28
## செய்தி மற்றும் விளம்பரம்
## பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| | முன்னுரை | 3 |
| 1 | செய்தி வெளியீட்டுப் பிரிவு | 6 |
| 2 | பத்திரிகையாளர் நல வாரியம் | 16 |
| 3 | புகைப்படப் பிரிவு | 20 |
| 4 | மேற்கோள் பிரிவு | 22 |
| 5 | நினைவகங்கள் | 24 |
| 6 | அரசு விழாக்கள் | 48 |
| 7 | கள விளம்பரம் | 70 |
| 8 | விளம்பரம் | 74 |
| 9 | பொருட்காட்சிப் பிரிவு | 78 |
| 10 | மாவட்ட செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகங்கள் | 90 |
| 11 | மாநிலச் செய்தி நிலையம் – சென்னை | 93 |
| 12 | தமிழரசு | 100 |
| 13 | தமிழ்நாடு திரைப்படப் பிரிவு | 106 |
| 14 | தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் (ம) தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் | 110 |
| 15 | திரைப்படம், வீடியோ மற்றும் கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவு | 116 |
| 16 | திரைப்படத் துறையினர் நலவாரியம் | 126 |
| 17 | திரைப்பட விருதுகள், மானியம் மற்றும் சின்னத்திரை விருதுகள் | 132 |
| | நிறைவுரை | 139 |

# முன்னுரை

பதர் நீக்கி நெல் கொள்வதைப் போல பேசப்படுவனவற்றில் பயனற்றதை நீக்கிவிட்டு பயனுள்ளதைக் கொள்ள வேண்டும்.

– பேரறிஞர் அண்ணா

சரியான செய்திகளை அறிந்து கொள்வதன் முக்கியத்துவத்தை உவமையோடு எடுத்துக் காட்டுகிறார் அண்ணா. நாள்தோறும் நாட்டுமக்களுக்கு வரும் எண்ணற்ற செய்திகளில் பயன் தரத்தக்க செய்திகளை, தகவல்களை மக்களின் வாழ்வு மேம்பாடு அடைவதற்காக அரசால் தீட்டப் பெறும் திட்டங்களை கொள்கைகளை கடைக்கோடி மக்களிடத்திலும் கொண்டு சேர்க்க வேண்டிய கடமையும் அரசிற்கு உண்டு.

**"இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த**
**வகுத்தலும் வல்ல தரசு"**

**(குறள் 385)**

– என்ற வள்ளுவன் வகுத்த அரச நெறிகளுக்கு ஏற்ப அயராது உழைத்து ஆட்சி நடத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முயற்சிகளுக்கு வலு சேர்க்கும் விதமாக அரசின் எண்ணற்ற திட்டங்களையும், சாதனைகளையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் மகத்தான பணியை

செய்தி – மக்கள் தொடர்புத் துறை உத்வேகத்துடனும் ஆற்றலுடனும் மேற்கொண்டு வருகிறது.

காலமாற்றத்திற்கு ஏற்ப நவீன தகவல் தொழில் நுட்ப வேகத்திற்கு ஈடுகொடுக்கும் வண்ணம் எளிதாகவும் விரைவாகவும் செய்திகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்குரிய வழிமுறைகளிலும் முன்னத்தி ஏராக செய்தி – மக்கள் தொடர்புத் துறை செயல்பட்டு வருகிறது.

தமிழக மக்கள் வளம்பெற வகை செய்யும் பல்வேறு திட்டங்கள் குறித்தும், அதன் மூலம் படைக்கப்படும் சாதனைகள் குறித்தும் மக்களிடம் கொண்டு செல்லும் மகத்தானப் பணியை, சொலல் வல்லனாய், சோர்விலனாய், செய்தி – மக்கள் தொடர்புத் துறை செயலாற்றி வருகிறது.

இந்த அரிய பணியை இத்துறையைச் சார்ந்த, செய்தி வெளியீட்டுப் பிரிவு, புகைப்படப் பிரிவு, மேற்கோள் பிரிவு, நினைவகங்கள் பிரிவு, விழாக்கள் பிரிவு, களவிளம்பரப் பிரிவு, விளம்பரப் பிரிவு, பொருட்காட்சிப் பிரிவு, தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, திரைப்படத்துறையினர் நல வாரியம், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம், தமிழரசு, செய்தி நிலையங்கள், மாவட்டங்களில் உள்ள செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகங்கள் என அனைத்து பிரிவுகளின் வாயிலாக

செய்தி – மக்கள் தொடர்புத் துறை சிறப்புடன் செயலாற்றி வருகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கூறியதுபோல உழைப்பு, உழைப்பு, உழைப்பு அதுதான் ஸ்டாலின். அக்கூற்றிற்கு ஏற்றார்போல் நாட்டு மக்களுக்காக ஒருகணம் ஓய்வில்லாமல் உழைத்து தன் வாழ்வையே தமிழக மக்களுக்காகவே அர்ப்பணித்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தான் சொன்ன எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்களையும், தான் சொல்லாத திட்டங்களையும், நிறைவேற்றிவரும் அரசின் சாதனைகளை அனைத்து மக்களிடமும் கொண்டு சேர்க்கும் மகத்தான பணியை இத்துறை முன் எப்போதும் இல்லாத வகையில் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது.

# செய்தி வெளியீட்டுப் பிரிவு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், செய்திக்குறிப்புகள், செய்தி வெளியீடுகளை பொதுமக்கள் உடனுக்குடன் அறிந்துகொள்ளும் வகையில், செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் மிக முக்கியமான பிரிவாகச் செயல்படும், செய்தி வெளியீட்டுப் பிரிவு அனைத்து நாள்களிலும் செயல்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர், அமைச்சர் பெருமக்களின் செய்திக்குறிப்புகள், அரசின் செய்தி வெளியீடுகள், அறிவிப்புகள், நலத்திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள், சாதனைகள், அரசு விழாக்கள், நிகழ்ச்சிகளின் விவரங்கள், நிகழ்ச்சி குறித்த புகைப்படங்கள், காணொலிப் பதிவுகள் ஆகியவற்றையும், தமிழ் – ஆங்கில நாளிதழ்கள், தொலைக்காட்சிகள், செய்தி முகமைகள், காலமுறை இதழ்கள், பிற மாநில நாளிதழ்கள், இணையதளச் செய்தி நிறுவனங்கள் என 325–க்கும் மேற்பட்ட ஊடகங்களுக்கு உடனுக்குடன் செய்தி வெளியீட்டுப் பிரிவின் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள், செய்தியாளர் கூட்டங்கள் நடத்திடத் தேவையான அனைத்து பணிகளும், இப்பிரிவின் மூலம் செய்யப்பட்டுவருகின்றன. மாண்புமிகு அமைச்சர்கள், அரசுத் துறைகளின் செயலாளர்கள் பங்கேற்கும் அரசு சார்ந்த விழாக்கள், முக்கியப் பிரமுகர்கள் வருகை தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்கு, செய்தியாளர்கள், தொலைக்காட்சிப் பிரிவினருக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கிடும் வகையில், ஒருங்கிணைப்புப் பணிகளை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

தலைமையிடத்திலிருந்து வெளியிடப்படும் முக்கிய அறிவிப்புகள், செய்தி வெளியீடுகள், முக்கிய நிகழ்வுகள் தொடர்பான செய்திகள், காணொலிப் பதிவுகள், புகைப்படங்கள் அனைத்தும் அதிநவீன முறையில் செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் www.dipr.tn.gov.in எனும் வலைதளத்தில் உடனுக்குடன் பதிவேற்றப்பட்டு ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அதேபோன்று, அனைத்து மாவட்ட செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும் மின்னஞ்சல் மூலம் உடனுக்குடன் அனுப்பிவைக்கப்பட்டு, மாவட்ட

அளவிலும் செய்திகள், புகைப்படங்கள் வெளிவர நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள் மாவட்டங்களில் கலந்து கொள்ளும் அரசு நிகழ்ச்சிகள், விழாக்கள், ஏனைய நிகழ்ச்சிகள் குறித்த செய்திகளும், புகைப்படங்களும் சம்பந்தப்பட்ட மாவட்ட செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகங்கள் மூலம் தலைமையிடத்துச் செய்தி வெளியீட்டுப் பிரிவில் பெறப்பட்டு, அவற்றை தலைமையிடத்திலிருந்து வெளியாகும் நாளிதழ்கள், தொலைக்காட்சிகள், வானொலிகள் ஆகியவற்றில் இடம்பெறச் செய்யும் பணிகளையும் செய்தி வெளியீட்டுப் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

## பத்திரிகையாளர் நலன்

### 1) பத்திரிகையாளர் ஓய்வூதியம்

அனைத்துத் தரப்புச் செய்திகளையும் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் அல்லும்பகலும் அயராது பணியாற்றிவரும் பத்திரிகையாளர்கள் ஓய்வுபெற்ற பின்னர் எந்தவித இன்னல்களுக்கும் ஆளாகாமல் இருக்க, அரசு சார்பில் மாதந்தோறும் ஓய்வூதியம் வழங்கும் திட்டம்

செயல்படுத்தப்படுகிறது. பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகள் பணியாற்றி, நலிவுற்ற நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

பத்திரிகையாளர் மாதாந்திர ஓய்வூதியமாக தற்போது ரூபாய் பத்தாயிரம் வழங்கப்பட்டு வருகிறது.

## 2) குடும்ப ஓய்வூதியம்

ஓய்வூதியம் பெற்றுவரும் பத்திரிகையாளர்கள் மறைவுக்குப் பின்னர், அவர்களின் குடும்ப நலனைக் கருத்தில்கொண்டு, மாதாந்திர குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. தற்போது பத்திரிகையாளர்களின் குடும்பத்தினருக்கு மாதாந்திர குடும்ப ஓய்வூதியமாக ரூபாய் ஐந்தாயிரம் வழங்கப்பட்டு வருகிறது.

## 3) குடும்ப உதவி நிதி

பத்திரிகைத் துறையில் ஆசிரியர், உதவி ஆசிரியர், செய்தியாளர், புகைப்படக்காரர் பிழை திருத்துநர் ஆகியோர் பணிக்காலத்தில் இயற்கை எய்த நேரிட்டால், அவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் குடும்ப உதவி நிதி பின்வருமாறு வழங்கப்பட்டு வருகிறது.

| பணிபுரிந்த ஆண்டுகள் | குடும்ப உதவி நிதித்தொகை |
|---|---|
| 5 | ரூ. 1,25,000/- |
| 10 | ரூ. 2,50,000/- |
| 15 | ரூ. 3,75,000/- |
| 20 | ரூ. 5,00,000/- |

**4) நலநிதியம்**

பத்திரிகையாளர் நலநிதிக்கென 'தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில்' ஒரு கோடி ரூபாய் நிரந்தர நிதியாக வைப்பீடு செய்யப்பட்டு, இந்தத் தொகையின் மூலம் கிடைக்கப்பெறும், வட்டித் தொகையிலிருந்து பத்திரிகையாளர்கள் பணிக்காலத்தில் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவச் சிகிச்சை மேற்கொள்ளும் நேரத்தில், அவர்களுக்கு மருத்துவ நிதியுதவியாக அதிகபட்சமாக ரூபாய் இரண்டு இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

**5) கொரோனா சிறப்பு ஊக்கத் தொகை**

கொரோனா வைரஸ் நோய்த் தொற்று (COVID-19) தடுப்பு நடவடிக்கையாகப் பத்திரிகைகள், தொலைக்காட்சிகள், காலமுறை இதழ்களில் பணிபுரியும் அங்கீகரிக்கப்பட்ட செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒளிப்பதிவாளர்களுக்கு

வழங்கப்பட்டு வந்த சிறப்பு ஊக்கத்தொகை தலா ரூபாய் மூன்றாயிரத்திலிருந்து ரூபாய் ஐந்தாயிரமாக உயர்த்தப்பட்டு, 5,782 பத்திரிகையாளர்களுக்கு மொத்தம் ரூபாய் இரண்டு கோடியே எண்பத்தி ஒன்பது இலட்சத்து பத்தாயிரம் வழங்கப்பட்டுள்ளது.

**6) கொரோனா இழப்பீட்டுத் தொகை**

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றால் உயிரிழந்த அங்கீகரிக்கப்பட்ட ஊடகப் பிரிவினரின் வாரிசுதாரருக்கு வழங்கப்பட்டுவந்த இழப்பீட்டுத் தொகை ரூபாய் ஐந்து இலட்சத்திலிருந்து ரூபாய் பத்து இலட்சமாக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டு, இதுவரை 17 செய்தியாளர்களின் வாரிசுதாரருக்கு தலா ரூபாய் பத்து இலட்சம் என மொத்தம் ரூபாய் ஒரு கோடியே எழுபது இலட்சம் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**7) அரசு வாடகைக் குடியிருப்பு**

2021-2022-ஆம் நிதியாண்டில், பத்திரிகைத் துறையில் பணிபுரியும் பத்திரிகையாளர்களுக்கு அரசு விருப்புரிமை ஒதுக்கீட்டில், சென்னையிலும், பிற மாவட்டங்களிலும் உள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகளில் பத்திரிகையாளர்களுக்கு குறைந்த வாடகையில் வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

**8) வீட்டுமனை வசதி**

மாவட்டங்களில் பத்திரிகைகள், தொலைக்காட்சிகளில் பணியாற்றும் சொந்த வீடு – வீட்டுமனை இல்லாத செய்தியாளர்களுக்கு, மாவட்ட ஆட்சியரின் அனுமதியின் பேரில் சலுகை விலையில் வருவாய் – பேரிடர் மேலாண்மைத் துறை மூலம் வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன.

**9) செய்தியாளர் அங்கீகார அட்டை**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் அரசு விழாக்கள், மிக முக்கிய பிரமுகர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகளுக்குச் சென்று செய்தி சேகரித்திட ஏதுவாக, நாளிதழில் பணிபுரியும் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், தொலைக்காட்சியில் பணிபுரியும் செய்தியாளர்கள், ஒளிப்பதிவாளர்களுக்கு, அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2021–2022ஆம் நிதியாண்டில் சென்னையில் 771 பத்திரிகையாளர்களுக்கும் பிற மாவட்டங்களில் 142 பத்திரிகையாளர்களுக்கும் ஆக மொத்தம் 913 பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**10) செய்தியாளர் அட்டை**

செய்தியாளர்கள் முக்கிய இடங்களுக்குச் சென்று செய்தி சேகரித்து வெளியிட ஏதுவாக,

காலமுறை இதழ் செய்தியாளர்களுக்கு செய்தியாளர் அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் 585 செய்தியாளர்களுக்கு செய்தியாளர் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

**11) செய்தியாளர்களுக்கான கட்டணமில்லாப் பேருந்துப் பயண அட்டை**

பத்திரிகையாளர் அங்கீகார அட்டை பெற்றுள்ள பத்திரிகையாளர்களுக்கு சென்னை, விழுப்புரம், அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளில் பயணம் செய்திட, 446 எண்ணிக்கையிலும் பிறமாவட்டங்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையின் பேரில், 2958 எண்ணிக்கையிலும் ஆக மொத்தம் 3404 கட்டணமில்லாப் பேருந்துப் பயண அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

**12) செய்தி முகமைகள்**

பி.டி.ஐ. (Press Trust of India), யு.என்.ஐ. (United News of India) ஆகிய இரண்டு செய்தி முகமைகள் வெளியிடும் செய்திகள் மாண்புமிகு ஆளுநர் மாளிகை அலுவலகத்தில் கணினிமூலம் 24 மணிநேரமும் பெறப்பட்டு, முக்கியமான செய்திகள் குறித்து தேவையான நடவடிக்கை எடுக்கும் பொருட்டு உரிய அரசுத் துறை அலுவலர்களின் கவனத்திற்கு உடனுக்குடன் அனுப்பி வைக்கப்படுகின்றன.

**13) செய்தியாளர் அறை**

தலைமைச் செயலகத்தில் அமைந்துள்ள செய்தியாளர் அறை, அனைத்து வசதிகளுடனும் சிறப்பான முறையில் பயன்பாட்டில் உள்ளது.

**14) ஊடக மையம்**

தலைமைச் செயலக முதன்மைக் கட்டடத்தின் தரைத்தளத்தில் ஊடகமையம் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்தில் 12 தொலைக்காட்சி சேனல்களில் வெளிவரும் மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்புகளும் அரசு சார்பான செய்திகளும் பதிவு செய்யப்படுகின்றன.

தலைமைச் செயலகத்தில் இருந்து வெளியிடப்படும் செய்திவெளியீடுகள், செய்திக் குறிப்புகள், புகைப்படங்கள் அனைத்தும், ஊடக மையத்திலிருந்து சென்னையில் உள்ள அனைத்து ஊடகங்களுக்கும் அனுப்பப்படுவதோடு, அனைத்து மாவட்ட செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டு, அந்தந்த மாவட்ட ஊடகங்களிலும் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

மாவட்ட செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்கள் மேற்கண்ட செய்திகள், ஊடகங்களில் வெளியான விவரங்களை ஒவ்வொரு நாளும் தலைமைச் செயலகத்தில் உள்ள ஊடக மையத்திற்கு அனுப்பி

வைக்கின்றனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்பான செய்தி வெளியீடுகள், செய்திக் குறிப்புகள், புகைப்படங்கள் மாவட்ட நாளிதழ்களில் சரியாக வெளியிடப்பட்டு வருகின்றனவா என்ற விவரங்கள் நாள்தோறும் மின்னஞ்சலில் பெறப்பட்டு தொகுக்கப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன.

**15) சமூக ஊடகப் பிரிவு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீடுகள், சாதனைகள், நிகழ்ச்சிகள், தொடர்பான செய்திகள், புகைப்படங்கள் ஆகியவற்றை கீச்சகம் (Twitter), படவரி (Instagram), முகநூல் (Facebook) மற்றும் வலையொளி (Youtube) ஆகிய சமூக ஊடகங்களின் வாயிலாக உடனுக்குடன் பொதுமக்களுக்குக் கொண்டு சேர்ப்பதற்கு ஏதுவாக சமூக ஊடகப் பணிகளை ஒருங்கிணைப்பதற்கு இத்துறையில் 'சமூக ஊடகப் பிரிவு' என்ற தனிப்பிரிவு புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது.

# பத்திரிகையாளர் நல வாரியம்

தமிழ்நாட்டில் முதன்முறையாக, உழைக்கும் பத்திரிகையாளர்களை முன்களப் பணியாளர்களாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து பெருமை சேர்த்துள்ளார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி, 2021–2022–ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடரில், 6.9.2021 அன்று பத்திரிகையாளர் நல வாரியம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதன்படி, உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அனைத்துத் திட்டங்களையும் ஒருங்கிணைத்துச் செவ்வனே செயல்படுத்துவதோடு, நல வாரிய உதவித்தொகைகள், நலத்திட்ட உதவிகள் அளித்திடும் வகையில் பத்திரிகையாளர் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | நலத்திட்ட உதவி | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | **கல்வி உதவித் தொகை (இரு குழந்தைகளுக்கு மட்டும்)** | |
| | 10ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000/– |
| | 10ஆம் வகுப்பு தேர்ச்சிபெற்ற குழந்தை (மகன் (அ) மகள்) | 1,000/– |
| | 11ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000/– |
| | 12ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | 1,500/– |
| | 12ஆம் வகுப்பு தேர்ச்சிபெற்ற ( மகன் (அ) மகள்) | 1,500/– |
| 2 | முறையான பட்டப்படிப்பு பயிலும் மாணாக்கர்கள் (ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும்) (வீட்டிலிருந்து கல்லூரிக்குச் செல்பவர்) | 1,500/– |
| | விடுதியில் தங்கி படிப்பவர்களுக்கு | 1,750/– |
| 3 | முறையான பட்ட மேற்படிப்பு பயிலும் மாணாக்கர்கள் (வீட்டிலிருந்து கல்லூரிக்குச் செல்பவர்) | 2,000/– |
| | விடுதியில் தங்கி படிப்பவர்களுக்கு | 3,000/– |
| 4 | முறையான தொழில்நுட்ப பட்டப் படிப்பிற்கு (வீட்டிலிருந்து கல்லூரிக்குச் செல்பவர்) | 2,000/– |
| | விடுதியில் தங்கி படிப்பவர்களுக்கு | 4,000/– |

| வ. எண் | நலத்திட்ட உதவி | தொகை ரூ. |
|---|---|---|
| 5 | முறையான தொழில்நுட்ப பட்ட மேற்படிப்பிற்கு (வீட்டிலிருந்து கல்லூரிக்குச் செல்பவர்) | 4,000/- |
| | விடுதியில் தங்கி படிப்பவர்களுக்கு | 6,000/- |
| 6 | ஐடிஐ (அ) பாலிடெக்னிக் படிப்பு (வீட்டிலிருந்து கல்லூரிக்குச் செல்பவர்) | 1,000/- |
| | விடுதியில் தங்கி படிப்பவர்களுக்கு | 1,200/- |
| 7 | திருமண உதவித் தொகை | 2,000/- |
| 8 | மகப்பேறு உதவித் தொகை | 6,000/- |
| 9 | கருக்கலைப்பு/கருச்சிதைவு உதவித் தொகை | 3,000/- |
| 10 | கண் கண்ணாடி செலவுத் தொகையை ஈடு செய்தல் (உறுப்பினர்களுக்கு மட்டும்) | 500/- |
| 11 | இயற்கை மரண நிதி | 50,000/- |
| 12 | ஈமச்சடங்கு உதவித் தொகை | 5,000/- |

பத்திரிகையாளர் நல வாரியத்திற்கு வரப்பெறும் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து, பயனாளிகளைத் தேர்வுசெய்து, நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கு ஏதுவாக செய்தித் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், அலுவல்சார் உறுப்பினர்களாக ஏழு அலுவலர்களையும், அலுவல் சாரா உறுப்பினர்களாக ஆறு பத்திரிகையாளர்களையும் கொண்ட பத்திரிகையாளர் நல வாரியக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

## கலைஞர் எழுதுகோல் விருது

இத்துறையின் அறிவிப்பிற்கிணங்க, இதழியல் துறையில் சமூக மேம்பாட்டிற்காகவும், விளிம்புநிலை மக்களின் மேம்பாட்டிற்காகவும் பங்காற்றிவரும் ஒரு சிறந்த இதழாளருக்கு ஆண்டுதோறும் ரூபாய் ஐந்து லட்சம் பரிசுத் தொகையுடன் பாராட்டுச் சான்றிதழும் கொண்ட ‘கலைஞர் எழுதுகோல் விருது’ வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. விருதாளரைத் தேர்வுசெய்ய தேர்வுக்குழுவும் அமைத்து ஆணையிடப்பட்டுள்ளது. இவ்விருதானது ஒவ்வோர் ஆண்டும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3 அன்று வழங்கப்படும்.

# புகைப்படப் பிரிவு

தலைமைச் செயலகத்தில் இயங்கிவரும் புகைப்படப் பிரிவில் உள்ள புகைப்படக்காரர்களைக் கொண்டு, தலைமையிடம், பிறமாவட்டங்களில், மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவர், மாண்புமிகு இந்திய குடியரசுத் துணைத்தலைவர், மாண்புமிகு இந்தியப் பிரதமர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் கலந்துகொள்ளும் அரசு நிகழ்ச்சிகள் புகைப்படம் எடுக்கப்படுகின்றன. மாவட்டங்களில் செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகங்களில் உள்ள புகைப்படக்காரர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து பணிபுரிந்து வருகின்றனர்.

தலைமைச் செயலகப் புகைப்படக்காரர்களால் எடுக்கப்படும் புகைப்படங்கள், தலைமைச் செயலகச் செய்தி வெளியீட்டுப் பிரிவின் மூலம் ஊடகங்களில் வெளியிடுவதற்காக அனுப்பப்படுவதுடன், பொது மக்களின் பார்வைக்காகத் தலைமைச் செயலகத்திலும், புதுதில்லி தமிழ்நாடு இல்லத்திலும் காட்சிப்படுத்தப்படுகின்றன.

அதுபோலவே, மாவட்டங்களில் உள்ள புகைப்படக்காரர்களால் எடுக்கப்படும் புகைப்படங்கள், அந்தந்த மாவட்டத்தில் இயங்கி வரும் ஊடகங்களுக்கு அனுப்பப்படுவதுடன், பொது மக்களின் பார்வைக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள விளம்பரப் பலகைகளிலும், முக்கிய அரசு நிகழ்ச்சிகளில் நடத்தப்படும் சிறு புகைப்படக் கண்காட்சிகளிலும் காட்சிப்படுத்தப்படுகின்றன. நமது துறையின் மூலம் வெளியிடப்படும் தமிழரசு தமிழ், ஆங்கில இதழ்களில், அனைத்துக் கட்டுரைகளும் வாசகர்கள் எளிதாகப் புரிந்துகொள்ளும்வகையில் நம் புகைப்படங்களுடனேயே வெளியிடப்பட்டு வருகிறது.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த புதிய திட்டங்கள் தொடர்பான புகைப்படங்கள், சாதனை மலர், காலப் பெட்டகத்திலும் அச்சடிக்கப்பட்டுப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் முறையில் வெளியிடப்பட்டு வருகின்றன.

அனைத்து அரசு நிகழ்ச்சிகளின் புகைப்படங்களும் எதிர்காலப் பயன்பாடு கருதி ப்ளூரே டிவிடி (Blu–ray DVD), வன் வட்டுகள் (Hard Disc) ஆகியவற்றில் சேமிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்படுகின்றன.

## மேற்கோள் பிரிவு
## (Reference Section)

அனைத்து நாளிதழ்கள், காலமுறை இதழ்கள், வெளிமாநில நாளிதழ்கள் போன்றவற்றில் வெளிவரும் முக்கியச் செய்திகளை, பல்வேறு வகைகளாகப் பிரித்து, துறைவாரியாக, நாள்தோறும் அந்தந்தத் துறையினரின் கவனத்திற்கு எடுத்துச் செல்லும் தலையாய பணியை செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் மேற்கோள் பிரிவு சிறப்புடன் செய்து வருகிறது.

இப்பிரிவில், நாள்தோறும் காலை, மாலை நாளிதழ்கள், காலமுறை இதழ்கள், வெளிமாநில நாளிதழ்களில் வெளியாகும் முக்கியச் செய்திகள், செய்தி நறுக்குகளாகத் தொகுக்கப்பட்டு, நாள்தோறும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு கோப்பு வடிவில் அனுப்பப்பட்டு வருகின்றன. அதேபோல, தலைமைச் செயலாளர், அரசுத்துறைச் செயலாளர்களின் பார்வைக்காகவும், நடவடிக்கைக்காகவும் அனுப்பி வைத்து, உரிய துறைகளின் மூலம் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவற்றைத் தவிர இப்பிரிவில், அரசுத்துறைகள் குறித்து வெளிவரும் புகார்கள் / குறைகள் குறித்த செய்திகள் 'உள்ளறி' (Scan) செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு கட்செவி (WhatsApp) வாயிலாக உடனுக்குடன் அனுப்பி, பதிலுரை பெறப்பட்டு அவை ஊடகத்தில் வெளியிட வழிவகை செய்யப்படுகிறது. மேலும், முக்கியமான நாளிதழ்கள், முறையாகத் தொகுக்கப்பட்டு பைண்டிங் செய்யப்பட்டு எதிர்காலத் தேவைக்கென இப்பிரிவில் ஆவணங்களாகப் பாதுகாக்கப்படுகின்றன. சட்டமன்றக் கூட்டத்தொடர் நடைபெறும் காலங்களிலும், மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், மாண்புமிகு அமைச்சர்கள், துறைச் செயலாளர்கள் ஆகியோருக்கு, நாளிதழ்களில் வெளியாகின்ற முக்கியச் செய்தி நறுக்குகள் தேவைப்படும்போது உடனுக்குடன் வழங்கப்படுகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், உரைகள், செய்தியாளர்கள் சந்திப்பு, அரசின் திட்டங்கள், சாதனைகள், அரசு நலத்திட்ட உதவிகள் உள்பட்ட அனைத்துச் செய்தி நறுக்குகளும், பல்வேறு தலைவர்களின் கருத்துகள், விமர்சனங்கள், நாளிதழ்களின் கட்டுரைகள், தலையங்கங்கள் போன்றவையும் தனித்தனித் தலைப்புகளில் தொகுக்கப்பட்டு கணினியில் பகுதி வாரியாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

# நினைவகங்கள்

தமிழகத்தின் புகழ்சால் பெருந்தகையாளர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு தமிழ்நாட்டிற்குப் பெருமையினைத் தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், சமூகநீதி, விடுதலை உணர்வுகளை ஊட்டிவளர்த்த கவிஞர்கள், இசை மேதைகள், தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத சாட்சியங்களாக விளங்கும் தியாகிகளின் நினைவுகளைப் போற்றிப் பெருமைப்படுத்தும் வகையில், செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், 73 நினைவகங்கள், நான்கு அரங்கங்கள், ஆறு நினைவுத்தூண்கள், ஒரு நினைவுச்சின்னம் ஆகியவை உருவாக்கப்பட்டு, அனைவரும் அறிந்து பயனடையும் வகையில், சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவற்றின் விவரங்கள்:

## தமிழகத்தில் அமைந்துள்ள நினைவகங்களின் விவரம்

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | பேரறிஞர் அண்ணா நினைவிடம் – அருங்காட்சியகம் | மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை |
| 2 | பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம் | மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை |
| 3 | காந்தி மண்டபம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 4 | பெருந்தலைவர் காமராஜர் நினைவகம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 5 | மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 6 | பெரியவர் எம்.பக்தவத்சலம் நினைவிடம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 7 | மகாகவி பாரதியார் நினைவு இல்லம் | துளசிங்கப் பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை |
| 8 | பெருந்தலைவர் காமராஜர் நினைவு இல்லம் | திருமலைச் சாலை, தியாகராயர் நகர், சென்னை |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 9 | வள்ளுவர் கோட்டம் | நுங்கம்பாக்கம், சென்னை |
| 10 | மொழிப்போர்த் தியாகிகள் மணிமண்டபம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 11 | தியாகிகள் மணிமண்டபம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 12 | இரட்டைமலை சீனிவாசன் நினைவகம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 13 | கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் மணிமண்டபம் | டாம்ஸ் சாலை, புதுப்பேட்டை, சென்னை |
| 14 | சிந்தனைச் சிற்பி ம.சிங்கார வேலர்– சுயமரியாதைச் சுடரொளி என்.ஜீவரத்தினம் மணி மண்டபங்கள் (ம) நூலகம் | இராயபுரம், சென்னை |
| 15 | நடிகர் திலகம் சிவாஜிகணேசன் மணிமண்டபம் | அடையாறு, சென்னை |
| 16 | பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம் | சின்ன காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம் |
| 17 | திருப்பூர் குமரன் நினைவகம் | திருப்பூர், திருப்பூர் மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 18 | பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி மணிமண்டபம் | உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம் |
| 19 | தந்தை பெரியார் நினைவகம் | வைக்கம், கோட்டயம் மாவட்டம், கேரள மாநிலம் |
| 20 | பெரியார்–அண்ணா நினைவகம் | ஈரோடு, ஈரோடு மாவட்டம் |
| 21 | தீரன் சின்னமலை மணிமண்டபம் | ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம் |
| 22 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த இல்லம் | தொரப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 23 | வள்ளல் அதியமான் கோட்டம் | தருமபுரி, தருமபுரி மாவட்டம் |
| 24 | தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபம் | பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம் |
| 25 | நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை நினைவு இல்லம் | நாமக்கல், நாமக்கல் மாவட்டம் |
| 26 | வ.வே.சுப்பிரமணிய அய்யர் நினைவு இல்லம் | வரகனேரி, திருச்சி மாநகர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 27 | பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம் | பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் |
| 28 | பட்டுக்கோட்டை அழகிரிசாமி நினைவு மண்டபம் | ஆவுடையான்குளம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் |
| 29 | தில்லையாடி வள்ளியம்மை நினைவகம் | தில்லையாடி, மயிலாடுதுறை மாவட்டம் |
| 30 | தமிழிசை மூவர் மணிமண்டபம் | சீர்காழி, மயிலாடுதுறை மாவட்டம் |
| 31 | தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. நினைவு இல்லம் | உத்தமதானபுரம், திருவாரூர் மாவட்டம் |
| 32 | தியாகி பி.சீனிவாசராவ் நினைவு மண்டபம் | திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம் |
| 33 | மனுநீதிச் சோழன் நினைவு மண்டபம் | திருவாரூர், திருவாரூர் மாவட்டம் |
| 34 | கவியரசு கண்ணதாசன் மணிமண்டபம் | காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 35 | தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம் | குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 36 | மருதுபாண்டியர் நினைவு மண்டபம் | திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம் |
| 37 | வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு மண்டபம் | சூரக்குளம், சிவகங்கை மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 38 | தியாக சீலர் கக்கன் மணிமண்டபம் | தும்பைப்பட்டி, மதுரை மாவட்டம் |
| 39 | தியாகி விஸ்வநாததாஸ் நினைவு இல்லம் | திருமங்கலம், மதுரை மாவட்டம் |
| 40 | பரிதிமாற் கலைஞர் நினைவு இல்லம் | விளாச்சேரி, மதுரை மாவட்டம் |
| 41 | மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் மணிமண்டபம் | சாத்தமங்கலம், மதுரை மாவட்டம் |
| 42 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த இல்லம் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 43 | பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு விழா மணிமண்டபம் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 44 | தியாகி சங்கரலிங்கனார் மணிமண்டபம் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 45 | மகாகவி பாரதியார் மணிமண்டபம் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 46 | மகாகவி பாரதியார் இல்லம் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 47 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் இல்லம் | ஓட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 48 | வீரன் அழகு முத்துக்கோன் மணிமண்டபம் | கட்டாலங்குளம், தூத்துக்குடி மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 49 | சுதந்திரப் போராட்ட வீரன் சுந்தரலிங்கம் நினைவகம் | கவர்னகிரி, தூத்துக்குடி மாவட்டம் |
| 50 | சுதந்திரப் போராட்ட வீரன் வெள்ளையத்தேவன் நினைவகம் | வல்லநாடு, தூத்துக்குடி மாவட்டம் |
| 51 | அமுதகவி உமறுப்புலவர் நினைவகம் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 52 | வீரபாண்டிய கட்டபொம்மன் மணிமண்டபம் | கயத்தாறு, தூத்துக்குடி மாவட்டம் |
| 53 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. மணிமண்டபம் | திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டம் |
| 54 | பூலித்தேவன் நினைவு மாளிகை | நெற்கட்டும்செவல், திருநெல்வேலி மாவட்டம் |
| 55 | தமிழறிஞர் கால்டுவெல் நினைவு இல்லம் | இடையன்குடி, திருநெல்வேலி மாவட்டம் |
| 56 | தியாகி வாஞ்சிநாதன் மணிமண்டபம் | செங்கோட்டை, தென்காசி மாவட்டம் |
| 57 | விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் மணிமண்டபம் | பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் |
| 58 | பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் மணிமண்டபம் | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 59 | காந்தி நினைவு மண்டபம் | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |
| 60 | பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம் | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |
| 61 | சதாவதானி செய்குத்தம்பி பாவலர் நினைவு மண்டபம் | இடலாக்குடி, கோட்டாறு நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 62 | மார்ஷல் நேசமணி மணிமண்டபம் | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 63 | முத்து மண்டபம் (இலங்கையின் கடைசித் தமிழ் மன்னர் விக்ரமராஜ சிங்கன் நினைவகம்) | வேலூர், வேலூர் மாவட்டம் |
| 64 | விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் மணிமண்டபம் | விருப்பாட்சி, திண்டுக்கல் மாவட்டம் |
| 65 | மாமன்னர்கள் ஹைதர்அலி, திப்பு சுல்தான் மணிமண்டபம் | அடியனூத்து கிராமம், திண்டுக்கல் மாவட்டம் |
| 66 | ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் மணிமண்டபம் | ஓமந்தூர், விழுப்புரம் மாவட்டம் |
| 67 | விடுதலைப் போராட்ட வீரர் தியாகி தீரன் சின்னமலை நினைவுச் சின்னம் | சங்ககிரி, சேலம் மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 68 | சுவாமி சகஜானந்தா மணிமண்டபம் | சிதம்பரம், கடலூர் மாவட்டம் |
| 69 | உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு மணிமண்டபம் | வையம்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம் |
| 70 | இராமசாமி படையாட்சியார் நினைவு மண்டபம் | மஞ்சக்குப்பம், கடலூர் மாவட்டம் |
| 71 | டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் மணிமண்டபம் | திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம் |
| 72 | மேனாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா நினைவிடம் | மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை |
| 73 | பாரதமாதா நினைவாலயம் | பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம் |

**அரங்கங்கள்**

| வ. எண் | அரங்கம் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | மூதறிஞர் இராஜாஜி மண்டபம் | ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை |
| 2 | கலைவாணர் அரங்கம் | ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை |
| 3 | அண்ணா கலை அரங்கம் | வேலூர், வேலூர் மாவட்டம் |
| 4 | மகாமகம் பல்நோக்கு கலை அரங்கம் | கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம் |

## நினைவுத் தூண்கள்

| வ. எண் | நினைவுத் தூண் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | "வெள்ளையனே வெளியேறு" இயக்கப் பொன்விழா நினைவுத் தூண் | காந்தி மண்டப வளாகம், சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 2 | சுதந்திரப் பொன்விழா நினைவுத் தூண் | போர் நினைவுச் சின்னம் அருகில், காமராஜர் சாலை, சென்னை |
| 3 | குடியரசு பொன்விழா நினைவுத் தூண் | காந்தி சிலை அருகில், காமராஜர் சாலை, சென்னை |
| 4 | சிப்பாய்ப் புரட்சி நினைவுத் தூண் | வேலூர், வேலூர் மாவட்டம் |
| 5 | பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு விழா நினைவுத் தூண் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 6 | இசை மேதை நல்லப்பசுவாமி நினைவுத் தூண் | விளாத்திகுளம், தூத்துக்குடி மாவட்டம். |

## நினைவுச் சின்னம்

| வ. எண் | நினைவுச் சின்னம் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | வீரத்தாய் குயிலி நினைவுச் சின்னம் | சூரக்குளம், சிவகங்கை மாவட்டம் |

**2021 – 2022 ஆம் ஆண்டு 110 விதியின் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் – தொடர் நடவடிக்கைகள்**

1845 முதல் 1914வரை வாழ்ந்த அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுடைய 175ஆவது ஆண்டு விழாவின் நினைவாகவும், அவரது அறிவை வணங்கும் விதமாகவும் சென்னை காந்தி மண்டப வளாகத்தில் ரூபாய் இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைத்திட நிருவாக அனுமதியளித்து அரசாணை வெளியிடப்பட்டு விரைவில் பணிகள் தொடங்கப்படவுள்ளன.

1987ஆம் ஆண்டு இடஒதுக்கீட்டுப் போராட்டத்தில் காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான 21 சமூகநீதிப் போராளிகளுக்கு ரூபாய் நான்கு கோடி மதிப்பீட்டில், விழுப்புரம் மாவட்டத்தில் மணிமண்டபம் அமைத்திட விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட வழுதரெட்டி கிராமத்தில் இடம் தேர்வுசெய்யப்பட்டு, நிருவாக அனுமதியளித்து, அரசாணை வெளியிடப்பட்டு பணி தொடங்கப்படவுள்ளது.

நவீன விளக்கப்படங்களுடன், சென்னை, காமராஜர் சாலை, அண்ணா நினைவிட வளாகத்தில் 2.21 ஏக்கர் பரப்பளவில் ரூபாய் முப்பத்து ஒன்பது கோடி மதிப்பீட்டில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு

நினைவிடத்தின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பிற அறிவிப்புகள் – தொடர் நடவடிக்கைகளின் விவரங்கள்**

மறைந்த எழுத்தாளர் கி.ராஜநாராயணன் அவர்களின் நினைவினைப் போற்றும் வகையிலும், அவருடைய படைப்பாளுமையை வெளிப்படுத்தும் வகையிலும், அவருடைய புகைப்படங்கள், படைப்புகள் ஆகியவற்றை மாணவர்களும் பொதுமக்களும் அறிந்து கொள்ளும் வகையில், கரிசல் இலக்கியத்தை உலகறியச் செய்த பிதாமகர் கி.ரா. அவர்களுக்கு, கோவில்பட்டியில் அரசின் சார்பில் திருவுருவச்சிலை, நூலகத்துடன் கூடிய அரங்கம் அமைத்திட ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சத்து எழுபது ஆயிரம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

உத்தரப்பிரதேச மாநிலம் காசியில் பாரதியார் வாழ்ந்த வீட்டைத் தமிழக அரசின் சார்பில் ரூபாய் பதினெட்டு இலட்சம் மதிப்பீட்டில் புனரமைப்பு செய்திட நிருவாக அனுமதியளித்து அரசாணை வெளியிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தூத்துக்குடியில் ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களுக்கு மணிமண்டபம் அமைத்திட நிருவாக

அனுமதியளித்து அரசாணை வெளியிடப்பட்டுப் பணிகள் தொடங்கப்படவுள்ளன.

சென்னை காந்தி மண்டபத்தில், வ.உ.சிதம்பரனார் அவர்கள் சிறையில் இழுத்த செக்கு வைக்கப்பட்டுள்ள மண்டபம் பொலிவூட்டப்பட்டு, அங்கு அன்னாரது மார்பளவுச் சிலை, ரூபாய் நாற்பத்தி மூன்று இலட்சத்து நாற்பத்தி இரண்டாயித்து எழுநூற்று இருபது மதிப்பீட்டில் அமைத்திட நிருவாக அனுமதியளித்து, அரசாணை வெளியிடப்பட்டு பணிகள், தொடங்கப்படவுள்ளன.

செய்தித் துறையின் பராமரிப்பிலுள்ள ஓட்டப்பிடாரம் வ.உ.சிதம்பரனார் அவர்கள் வாழ்ந்த நினைவு இல்லத்தைப் புனரமைக்கவும், திருநெல்வேலியில் உள்ள வ.உ.சிதம்பரனார் மணிமண்டபத்தில் அன்னாரின் வாழ்க்கை வரலாற்றை அனைவரும் அறிந்து பயனடையும் வகையில், ஒலி–ஒளிக் காட்சி அமைத்திடவும் ரூபாய் எழுபத்திரெண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மதிப்பீட்டில் நிருவாக அனுமதியளித்து, அரசாணை வெளியிடப்பட்டு, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கோயம்புத்தூர் வ.உ.சிதம்பரனார் பூங்காவில், வ.உ.சிதம்பரனார் அவர்களுக்குத் திருவுருவச் சிலை ரூபாய் நாற்பத்தி மூன்று இலட்சத்து எழுபதாயிரம்

மதிப்பீட்டில் அமைத்திட நிருவாக அனுமதியளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**செய்தித் துறையின் அறிவிப்புகள் – தொடர் நடவடிக்கைகளின் விவரங்கள்**

தமிழ்நாட்டில் ஆங்கிலேயர்களின் ஆட்சியினை எதிர்த்து தீரமாய்ப் போரிட்டுத் தூக்குக் கயிற்றினை ஏற்றுக்கொண்ட விடுதலைப் போராட்ட மாவீரர் பாஞ்சாலங்குறிச்சி குறுநில மன்னர் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் ரூபாய் பதினெட்டு இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை அமைத்திட நிருவாக அனுமதியளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. பணிகள் தொடங்கப்படவுள்ளன.

தாய்நாட்டின் விடுதலைக்காக ஆங்கிலேயர்களை எதிர்த்து விடுதலை வேள்வியில் தீர்க்கமாய்ப் போரிட்ட சிவகங்கைச் சீமையை ஆண்ட மருது சகோதரர்களுக்கு சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் திருவுருவச் சிலை அமைத்திட ரூபாய் முப்பத்தி நான்கு இலட்சம் மதிப்பீட்டில் நிருவாக அனுமதியளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகி, ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்ற தென்னிந்தியாவின் முதல் பெண்மணி, அண்ணல் காந்தியடிகளால் தென்னிந்தியாவின் ஜான்சிராணி என்று அழைக்கப்பட்ட, சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களுக்கு, கடலூரில் திருவுருவச் சிலை ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மதிப்பீட்டில் அமைத்திட, கடலூர் மாநகராட்சி முதுநகர் காந்தி பூங்காவில் இடம் தேர்வு செய்யப்பட்டு, நிருவாக அனுமதியளித்து அரசாணை வெளியிடப்பட்டு பணிகள் தொடங்கப்படவுள்ளன.

இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானியாகவும், இளைஞர்கள், மாணவர்களின் எழுச்சி நாயகனாகவும் திகழ்ந்த, மேனாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களுக்கு, சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் திருவுருவச் சிலை ரூபாய் பதினெட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மதிப்பீட்டில் அமைத்திட, நிருவாக அனுமதியளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அண்ணா பல்கலைக்கழகம் இதற்கான இடத்தைத் தெரிவுசெய்து அனுப்பியுள்ளது. சிலை அமைப்பதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவரும், இந்தியத் திருநாட்டின் தேசிய கீதத்தை இயற்றிவருமான வங்கக் கவி இரவீந்திரநாத் தாகூர் அவர்களுக்கு சென்னை இராணி மேரி கல்லூரியில் ரூபாய் இருபத்தாறு இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை அமைத்திட, நிருவாக அனுமதியளிக்கப்பட்டுள்ளது. கல்லூரியில் இடமும் தேர்வுசெய்யப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் தொடங்கப்படவுள்ளன.

பெண் சமூகச் சீர்திருத்தவாதி, எழுத்தாளர், தேவதாசி ஒழிப்பு இயக்கம், திராவிட இயக்கத்தின் அரசியல் முன்னோடி மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுக்கு மயிலாடுதுறையில் ரூபாய் பதினாறு இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை அமைத்திட, மயிலாடுதுறை வரதாச்சியார் பூங்காவில் இடம் தேர்வுசெய்யப்பட்டு நிருவாக அனுமதியளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் நடவடிக்கையில் உள்ளன.

நாட்டிலேயே சட்டமன்றத்திற்கு முதல் பெண் உறுப்பினராகத் தேர்வுசெய்யப்பட்டவரும், இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவரும், தமிழ்நாட்டின் சமூக சீர்திருத்தப் பெண் மருத்துவருமான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களுக்கு, புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில்

ரூபாய் பத்து இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை அமைத்திட இடம் தேர்வு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்தியத் திருநாட்டின் 75ஆவது சுதந்திர நாள் விழாவை முன்னிட்டு விடுதலைப் போராட்ட வீரர்களின் நினைவிடங்களை மேம்படுத்தி ஒலி–ஒளிக்காட்சி அமைக்கவும், சுதந்திரப் போராட்டத் தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கும் வகையில் குறும்படங்கள் தயாரிக்கவும், மக்களுக்குத் தொண்டாற்றிய தியாகிகளை நினைவுகூரும் வகையில், நினைவுமண்டபங்களைப் புதுப்பிக்கவும், பொதுமக்கள் அறிந்துகொள்ள உதவும் வகையில் புகைப்படக் கண்காட்சி, ஒலி–ஒளிக்காட்சி போன்றவை அமைக்கவும் அறிவிப்பு வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, முதற்கட்டமாக, 10 நினைவிடங்களில் ஒலி–ஒளிக்காட்சி அமைத்திட திட்ட மதிப்பீடுகள் பெறப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்னை, காந்தி மண்டப வளாகத்தில் தியாக சீலர்களை நினைவுகூரும் வகையில் அமைக்கப்பட்டுள்ள காந்தி மண்டபம் – அருங்காட்சியகம், பெருந்தலைவர் காமராஜர் நினைவு மண்டபம், பெரியவர் பக்தவத்சலம் நினைவுமண்டபம், மூதறிஞர் இராஜாஜி நினைவுமண்டபம் ஆகியவற்றை

மேம்படுத்திட ரூபாய் மூன்று கோடியே முப்பத்தி எட்டு இலட்சத்து எழுபதாயிரத்திற்கு திட்ட மதிப்பீடு பெறப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுதந்திரப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் நாயக்கர் அவர்களுக்கு திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை நகராட்சி அலுவலக வளாகத்தில் திருவுருவச் சிலையும், திருமூர்த்தி அணை அருகில் அரங்கமும் ரூபாய் இரண்டு கோடியே அறுபது இலட்சம் மதிப்பீட்டில் அமைத்திட இடம் தேர்வுசெய்யப்பட்டு நிருவாக அனுமதியளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத்திட்டம் உருவாக முக்கியக் காரணமாக இருந்தவர்களில் ஒருவரான திரு.வி.கே.பழனிசாமி கவுண்டர் அவர்களுக்கு ஆழியாறு அணையின் பூங்காவில் நினைவு மண்டபம், மார்பளவுச்சிலை அமைக்கும் பணியினை மாற்றி இதனை பி.ஏ.பி. திட்டப்பணிகள் (P.A.P–Parambikulam Aliyar Project) நடைபெற்றபோது ஏற்பட்ட விபத்தில் உயிர்நீத்தவர்களுக்கான நினைவு மண்டபமாக அமைத்திடவும், பொள்ளாச்சியில் செயல்படும் நீர்வளத்துறையின் தலைமைப் பொறியாளர்

அலுவலக வளாகத்திற்கு ஒன்றிய அரசின் மறைந்த மேனாள் அமைச்சர் ‘சி.சுப்பிரமணியம் வளாகம்’ என்று பெயர் சூட்டிடவும், இவ்வளாகத்தில் விவசாயப் பெருமக்களுக்குப் பயிற்சிகள் கருத்தரங்கம் போன்ற நிகழ்ச்சிகள் நடத்திடவும் ஏதுவாக, ரூபாய் நான்கு கோடி மதிப்பீட்டில் இரண்டு அடுக்குகள் கொண்ட புதிய அரங்கு அமைத்து, இவ்வரங்கத்தின் கீழ்த்தளத்திற்கு ‘வி.கே.பழனிசாமி அரங்கம்’ எனப் பெயர் சூட்டிடவும், அதன் மேல்தளத்தில் அமைக்கப்படும் அரங்கத்திற்குப் ‘பொள்ளாச்சி நா.மகாலிங்கம்’ அவர்களின் பெயர் சூட்டிடவும், இம்மண்டபத்தில் பரம்பிக்குளம் – ஆழியாறுத் திட்டப்பணிகள் குறித்துப் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் புகைப்படக் கண்காட்சி அமைத்திடவும், இவ்வளாகத்தில் மேனாள் சட்டமன்ற உறுப்பினர், வி.கே.பழனிசாமி கவுண்டர், மேனாள் அமைச்சர் சி.சுப்பிரமணியம், மேனாள் சட்டமன்ற உறுப்பினர் தொழிலதிபர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம், ஆகியோரைப் பெருமைப்படுத்தும் வகையில், அன்னாரின் திருவுருவச் சிலைகள் நிறுவிடவும், நிருவாக அனுமதியளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. பணிகள் விரைந்து தொடங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தமிழுக்கும், தமிழக மக்களுக்கும் அயராது உழைத்தவரும், சமூகநீதிக் கோட்பாடுகளுக்காகச் சட்டவடிவம் கொடுத்தவருமான சென்னை மாகாணத்தின் மேனாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களின் சேவைகளை நினைவுகூரும் வகையில், அன்னாருக்கு சென்னையில் திருவுருவச் சிலையும், நாமக்கல் நகரில் அன்னாரின் பெயரில் ஓர் அரங்கமும் அமைத்திட ரூபாய் இரண்டு கோடியே அறுபது இலட்சம் மதிப்பீட்டில் நிருவாக அனுமதியளித்து அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள் தொடங்கப்படவுள்ளன.

கொங்கு மண்டலத்தில் ஏறக்குறைய இரண்டு இலட்சம் ஏக்கர் பாசனம் பெறும் நீர்ப்பாசனத் திட்டமான கீழ்பவானி பாசனத் திட்டம் கொண்டுவர முக்கியக் காரணகர்த்தாவாக இருந்த, ஈரோடு தொகுதியின் மேனாள் சட்டமன்ற உறுப்பினரும், சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்று சுமார் பதினொரு ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த, உத்தமத் தியாகி ஐயா திரு.ஈஸ்வரன் அவர்களது நினைவைப் போற்றும் வகையிலும், இன்றைய தலைமுறையினரும் அவருடைய செயல்பாடுகளைத் தெரிந்துகொள்ளும் வகையிலும், ஈரோடு மாவட்டம் பவானிசாகர் நகரியத்தில் ரூபாய் இரண்டு கோடியே அறுபது இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை மற்றும் அரங்கம்

அமைத்திட நிருவாக அனுமதியளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் தொடங்கப்படவுள்ளன.

மேனாள் அமைச்சரும், ஏழை எளியோரின் வாழ்க்கை முன்னேற்றத்திற்குப் பெரும் பங்காற்றி மறைந்த தனிப்பெரும் தலைவரும், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர்களின் அமைச்சரவையில் சிறப்புடன் பணியாற்றிய திரு.ஏ.கோவிந்தசாமி அவர்களின் நினைவாக விழுப்புரம் மாவட்டம் வழுதரெட்டி கிராமத்தில் திருவுருவச்சிலையுடன் கூடிய அரங்கம் ரூபாய் இரண்டு கோடியே அறுபது இலட்சம் மதிப்பீட்டில் அமைத்திட நிருவாக அனுமதியளித்துள்ளது. விரைவில் பணிகள் தொடங்கப்படவுள்ளன.

சென்னை வள்ளுவர் கோட்டத்தினை நவீன முறையில் இருபத்து ஒன்பது கோடியே ஐம்பத்தைந்து இலட்சத்து அறுபத்தோராயிரத்து நூற்று எண்பத்து நான்கு ரூபாய் மதிப்பீட்டில் புனரமைப்புப் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

**தற்போது நடைபெற்றுவரும் பிற திட்டப்பணிகள்**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மத்திய பேருந்து நிலையம் அருகில் சர் ஏ.டி.பன்னீர்செல்வம், பெரும்பிடுகு முத்தரையர், எம்.கே.தியாகராஜ பாகவதர்

ஆகியோருக்கு மணிமண்டபங்கள் அமைத்திடும் பணிகள் நிறைவுபெறும் தருவாயில் உள்ளன.

தூத்துக்குடி மாவட்டம், வல்லநாட்டில் அமைந்துள்ள சுதந்திரப் போராட்ட வீரர் வெள்ளையத் தேவன் மணிமண்டபத்தில் ரூபாய் முப்பத்தொன்பது இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மதிப்பீட்டில் சுதந்திரப் போராட்ட வீரர் வெள்ளையத் தேவன் அவர்கள் குதிரை மீது அமர்ந்தவாறு உள்ள சிலை அமைக்கும் பணி நிறைவு பெறும் தருவாயில் உள்ளது.

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் அருகில் உள்ள அச்சிறுப்பாக்கம் கிராமத்தில் இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைத்திடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நாமக்கல் மாவட்டம், ஜேடர்பாளையத்தில் அல்லாள இளைய நாயகர் அவர்களுக்கு, ரூபாய் இருபத்தொன்று இலட்சத்து எண்பதாயிரம் மதிப்பீட்டில் குவிமாடத்துடன் (Dome) திருவுருவச் சிலை அமைத்திட அரசாணை வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளையில், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு, ரூபாய் தொண்ணூற்று இரண்டு இலட்சத்து இருபத்தேழாயிரம் மதிப்பீட்டில், திருவுருவச் சிலையுடன் கூடிய

மணிமண்டபமும், ஒரு நூலகமும் அமைத்திட அரசாணை வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்ட நிலையில், இது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு நடைபெற்று வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ள ஒண்டிவீரன் மணிமண்டபத்தை, ரூபாய் ஐம்பத்தொரு இலட்சத்து எழுபத்தொன்பதாயிரம் மதிப்பீட்டில் புனரமைப்பதுடன், அதே வளாகத்தில் நூலகம் ஒன்றை அமைத்திட அரசாணை வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

1920ஆம் ஆண்டு மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள பெருங்காமநல்லூரில் ஆங்கிலேய ஆட்சியாளர்களின் எதேச்சதிகாரச் சட்டத்தை எதிர்த்துப் போராடி, தங்கள் இன்னுயிரை ஈந்த பிரமலைக் கள்ளர் சமூகத்தைச் சேர்ந்த பதினாறு தியாகிகளைச் சிறப்பிக்கும் வகையிலும், அந்நிகழ்வு நடந்து 100 ஆண்டுகள் நிறைவு பெற்றதைக் குறிக்கும் வகையிலும், ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து ஏழு இலட்சம் மதிப்பீட்டில் நினைவு மண்டபம் அமைத்திட அரசாணை வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தூத்துக்குடி மாவட்டம், காமநாயக்கன்பட்டியில் அமைந்துள்ள புனித பரலோகமாதா ஆலய வளாகத்தில்

வீரமாமுனிவர் அவர்களுக்கு, ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைத்திட நிருவாக அனுமதியளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

**நிறைவுபெற்ற பணிகள்**

நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்களைச் சிறப்பிக்கும் வகையில் அன்னாருக்கு, சென்னை, சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகை வளாகத்தில், அரசின் சார்பில் மார்பளவு வெண்கலச் சிலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 26.12.2021 அன்று திறந்துவைக்கப்பட்டது.

**மணிமண்டபங்கள் / நினைவகங்களை 360° பரிமாணத்தில் படமெடுத்தல்**

செய்தித்துறையின் இணையதளத்தில் சென்னை பெருநகரில் உள்ள 16 மணிமண்டபங்கள் / நினைவகங்கள், கலைவாணர் அரங்கம் ஆகியவற்றை 360° பரிமாணத்தில் படமெடுத்துப் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மற்ற மண்டபங்கள் / நினைவகங்கள் ஆகியவற்றையும் 360° பரிமாணத்தில் படமெடுத்துப் பதிவேற்றம் செய்யப்படும்.

# அரசு விழாக்கள்

நம் தாய்த் திருநாடாம் இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காகத் தங்கள் இன்னுயிரைத் துச்சமெனக் கருதி தியாகம் செய்த தன்னிகரில்லாத் தலைவர்களையும், தமிழகத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட தலைவர்களையும், செம்மொழி, அமுதமொழி என சிறப்புப் பெற்ற நம் தாய்மொழி, தமிழ்மொழி வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்த அறிஞர் பெருமக்களைப் போற்றிப் புகழ்ந்திடவும், அவர்களது நோக்கங்கள், உயரிய சிந்தனைகளை, அவர்களின் தியாகங்களை, தொண்டினை இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளவும் அவர்களின் பிறந்த நாள் விழாக்கள், நினைவு நாள் நிகழ்ச்சிகள் அரசால் நடத்தப்பட்டு வருகின்றன.

அரசின் சார்பில் நடத்தப்படும் விழாக்களில் மாண்புமிகு ஆளுநர், மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசு அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்று, தியாகத் தலைவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு அரசின் சார்பில் மாலைகள் அணிவித்தும், திருவுருவப் படங்களுக்கு மலர் தூவியும்

மரியாதை செலுத்துகின்றனர். சென்னை மாவட்டத்தில் 36 தலைவர்களுக்கும் பிற மாவட்டங்களில் 77 தலைவர்களுக்கும் பல்வேறு இடங்களில் அவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்தும், மலர் தூவியும் மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது.

**சென்னையில் நடத்தப்படும் விழாக்கள்**

| வ. எண் | நாள் | விழா |
|---|---|---|
| 1 | ஜனவரி 17 | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழா |
| 2 | ஜனவரி 23 | நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த நாள் விழா |
| 3 | ஜனவரி 30 | அண்ணல் காந்தியடிகள் நினைவு நாள் |
| 4 | பிப்ரவரி 18 | சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பிறந்த நாள் விழா |
| 5 | பிப்ரவரி 24 | மேனாள் முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா பிறந்த நாள் விழா |
| 6 | ஏப்ரல் 14 | டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் பிறந்த நாள்–சமத்துவ நாள் விழா |
| 7 | சித்திரை முழு நிலவு நாள் | சித்திரை முழு நிலவு நாளில் கண்ணகிக்கு விழா |

| வ. எண் | நாள் | விழா |
|---|---|---|
| 8 | ஏப்ரல் 17 | சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை பிறந்த நாள் விழா |
| 9 | ஏப்ரல் 27 | சர்.பி.டி.தியாகராயர் பிறந்த நாள் விழா |
| 10 | ஏப்ரல் 29 | பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா |
| 11 | ஜூன் 5 | கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் பிறந்த நாள் விழா |
| 12 | ஜூன் 24 | கவியரசு கண்ணதாசன் பிறந்த நாள் விழா |
| 13 | ஜூன் 26 | சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் பிறந்த நாள் விழா |
| 14 | ஜூலை 7 | இரட்டைமலை சீனிவாசன் பிறந்த நாள் விழா |
| 15 | ஜூலை 11 | வீரன் அழகுமுத்துக்கோன் பிறந்த நாள் விழா |
| 16 | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் விழா |
| 17 | ஜூலை 17 | தியாகிகள் தினம், தியாகி ஆர்யா (எ) பாஷ்யம் |

| வ. எண் | நாள் | விழா |
|---|---|---|
| 18 | ஜூலை 17 | தியாகிகள் தினம்,<br>தியாகி சங்கரலிங்கனார் |
| 19 | ஜூலை 17 | தியாகிகள் தினம்,<br>தியாகி செண்பகராமன் |
| 20 | ஆடி மாதம்<br>18ஆம் நாள் | சுதந்திரப் போராட்ட வீரர்<br>தீரன்சின்னமலை<br>நினைவு நாள் |
| 21 | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன்<br>வ.உ.சிதம்பரனார்<br>பிறந்த நாள் விழா |
| 22 | செப்டம்பர் 11 | மகாகவி பாரதியார்<br>நினைவு நாள்– மகாகவி நாள் |
| 23 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா<br>பிறந்த நாள் விழா |
| 24 | செப்டம்பர் 16 | இராமசாமி படையாட்சியார்<br>பிறந்த நாள் விழா |
| 25 | செப்டம்பர் 17 | தந்தை பெரியார்<br>பிறந்த நாள்– சமூகநீதி நாள் விழா |
| 26 | செப்டம்பர் 27 | டாக்டர் சி.பா. ஆதித்தனார்<br>பிறந்த நாள் விழா |
| 27 | செப்டம்பர் 29 | மேனாள் சென்னை மேயர்<br>சிவராஜ் பிறந்த நாள் விழா |

| வ. எண் | நாள் | விழா |
|---|---|---|
| 28 | அக்டோபர் 1 | நடிகர் திலகம் சிவாஜிகணேசன் பிறந்த நாள் விழா |
| 29 | அக்டோபர் 2 | அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா |
| 30 | அக்டோபர் 30 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழா |
| 31 | நவம்பர் 8 | தமிழறிஞர் வீரமாமுனிவர் பிறந்த நாள் விழா |
| 32 | நவம்பர் 14 | பண்டித ஜவஹர்லால் நேரு பிறந்த நாள் விழா |
| 33 | நவம்பர் 18 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் நினைவு நாள்– தியாகத் திருநாள் |
| 34 | நவம்பர் 23 | கவிஞர் சுரதா பிறந்த நாள் விழா |
| 35 | டிசம்பர் 10 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா |
| 36 | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா |

**மாவட்டங்களில் நடத்தப்படும் விழாக்கள்**

| வ. எண் | நாள் | விழா | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 1 | ஜனவரி 3 | வீரமங்கை வேலுநாச்சியார் பிறந்த நாள் விழா | சூரக்குளம், சிவகங்கை மாவட்டம் |
| 2 | ஜனவரி 15 | ஜான் பென்னிகுயிக் பிறந்த நாள் விழா | லோயர் கேம்ப், தேனி மாவட்டம் |
| 3 | ஜனவரி 17 | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழா | காமராஜர் சாலை, சென்னை மாவட்டம் |
| 4 | ஜனவரி 17 | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழா | சேலம், சேலம் மாவட்டம் |
| 5 | தை 5ஆம் தேதி | காளிங்கராயன் அவர்கள் வாய்க்காலை வெட்டி நாட்டுக்கு அர்ப்பணித்த நாள் | காளிங்கராயன் அணைக்கட்டு, ஈரோடு மாவட்டம் |
| 6 | ஜனவரி 26 | தியாகி சங்கரலிங்கனார் பிறந்த நாள் விழா | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 7 | ஜனவரி 27 | சுவாமி சகஜானந்தா பிறந்த நாள் விழா | சிதம்பரம், கடலூர் மாவட்டம் |
| 8 | பிப்ரவரி 1 | ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் பிறந்த நாள் விழா | ஓமந்தூர், விழுப்புரம் மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழா | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 9 | பிப்ரவரி 6 | உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு பிறந்த நாள் விழா | வையம்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம். |
| 10 | பிப்ரவரி 7 | மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் பிறந்த நாள் விழா | சாத்தமங்கலம், மதுரை மாவட்டம் |
| 11 | தைப்பூசத் திருநாள் | திருமலை நாயக்கர் பிறந்த நாள் விழா | மதுரை, மதுரை மாவட்டம் |
| 12 | பிப்ரவரி 18 | சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர் பிறந்த நாள் விழா | இராயபுரம், சென்னை மாவட்டம் |
| 13 | பிப்ரவரி 19 | தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. பிறந்த நாள் விழா | உத்தமதானபுரம், திருவாரூர் மாவட்டம் |
| 14 | பிப்ரவரி 22 | தில்லையாடி வள்ளியம்மை பிறந்த நாள் விழா | தில்லையாடி, மயிலாடுதுறை மாவட்டம் |
| 15 | பிப்ரவரி 24 | மேனாள் முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா பிறந்த நாள் விழா | சேலம், சேலம் மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழா | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 16 | மார்ச் 30 | ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி பிறந்த நாள் விழா | இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம் |
| 17 | ஏப்ரல் 2 | வ.வே.சுப்பிரமணிய அய்யர் பிறந்த நாள் விழா | வரகனேரி, திருச்சி மாநகர், திருச்சி மாவட்டம் |
| 18 | ஏப்ரல் 10 | தியாகி பி. சீனிவாசராவ் பிறந்த நாள் விழா | திருத்துறைப் பூண்டி, திருவாரூர் மாவட்டம் |
| 19 | ஏப்ரல் 13 | பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பிறந்த நாள் விழா | பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் |
| 20 | ஏப்ரல் 16 | வீரன் சுந்தரலிங்கம் பிறந்த நாள் விழா | கவர்னகிரி, தூத்துக்குடி மாவட்டம் |
| 21 | சித்ரா பௌர்ணமி | வள்ளல் அதியமான் பிறந்த நாள் விழா | அதியமான் கோட்டை, தருமபுரி மாவட்டம் |
| 22 | ஏப்ரல் 17 | தீரன் சின்னமலை பிறந்த நாள் விழா | ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழா | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 23 | மே 7 | இராபர்ட் கால்டுவெல் பிறந்த நாள் விழா | இடையன்குடி, திருநெல்வேலி மாவட்டம் |
| 24 | சித்திரை இறுதி வெள்ளி | வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள் விழா | கயத்தாறு, தூத்துக்குடி மாவட்டம் |
| 25 | சித்திரை இறுதி வெள்ளி | வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள் விழா | பாஞ்சாலங்குறிச்சி, தூத்துக்குடி மாவட்டம் |
| 26 | மே 23 | பெரும்பிடுகு முத்தரையர் பிறந்த நாள் விழா | திருச்சிராப்பள்ளி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 27 | மே 31 | சுதந்திரப் போராட்ட வீரர் வெள்ளையத் தேவன் பிறந்த நாள் விழா | வல்லநாடு, தூத்துக்குடி மாவட்டம். |
| 28 | ஜூன் 12 | மார்ஷல் நேசமணி பிறந்த நாள் விழா | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 29 | ஜூன் 16 | தியாகி விஸ்வநாததாஸ் பிறந்த நாள் விழா | திருமங்கலம், மதுரை மாவட்டம் |
| 30 | ஜூன் 18 | தியாக சீலர் கக்கன் பிறந்த நாள் விழா | மேலூர் அருகில், தும்பைப்பட்டி, மதுரை மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழா | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 31 | ஜூன் 23 | பட்டுக்கோட்டை அழகிரிசாமி பிறந்த நாள் விழா | பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் |
| 32 | ஜூன் 24 | கவிஞர் கண்ணதாசன் பிறந்த நாள் விழா | காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 33 | ஜூலை 6 | தமிழறிஞர் பரிதிமாற்கலைஞர் பிறந்த நாள் விழா | விளாச்சேரி, மதுரை மாவட்டம் |
| 34 | ஜூலை 11 | வீரன் அழகு முத்துக்கோன் பிறந்த நாள் விழா | கட்டாலங்குளம், தூத்துக்குடி மாவட்டம் |
| 35 | ஜூலை 11 | தவத்திரு குன்றக்குடி அடிகளார் பிறந்த நாள் விழா | குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 36 | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள்விழா | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |
| 37 | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள்விழா | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 38 | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழா | திருமலைச்சாலை, தியாகராயர் நகர், சென்னை மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழா | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 39 | ஜூலை 17 | தியாகி வாஞ்சிநாதன், தியாகிகள் தினம் | செங்கோட்டை, தென்காசி மாவட்டம் |
| 40 | ஜூலை 31 | சதாவதானி செய்குத்தம்பி பாவலர் பிறந்த நாள் விழா | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 41 | ஆடி 17, 18 | வல்வில் ஓரி விழா | கொல்லிமலை, நாமக்கல் மாவட்டம் |
| 42 | ஆடி 18 | தீரன் சின்னமலை நினைவு நாள் | ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம் |
| 43 | ஆடி 18 | தீரன்சின்னமலை நினைவு நாள் | தூக்கிலிடப்பட்ட இடமான சங்ககிரி, சேலம் மாவட்டம் |
| 44 | ஆகஸ்ட் 20 | விடுதலைப் போராட்டவீரர் ஒண்டி வீரன் நினைவு நாள் | பாளையங் கோட்டை, திருநெல்வேலி மாவட்டம். |
| 45 | ஆகஸ்ட் 21 | பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் பிறந்த நாள் விழா | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழா | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 46 | ஆகஸ்ட் 25 | திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் பிறந்த நாள் விழா | காங்கேய நல்லூர், காட்பாடி வட்டம், வேலூர் மாவட்டம், |
| 47 | ஆவணி 16 | விடுதலைப் போராட்ட வீரர் பூலித்தேவன் பிறந்த நாள் விழா | நெற்கட்டும் செவல், திருநெல்வேலி மாவட்டம் |
| 48 | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் விழா | ஓட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 49 | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் விழா | திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டம் |
| 50 | செப்டம்பர் 5 | விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் நினைவு நாள் | விருப்பாச்சி, திண்டுக்கல் மாவட்டம் |
| 51 | செப்டம்பர்15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா | அண்ணா சதுக்கம், சென்னை மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழா | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 52 | செப்டம்பர்15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா | சின்ன காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம் |
| 53 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா | ஈரோடு, ஈரோடு மாவட்டம் |
| 54 | செப்டம்பர் 16 | இராமசாமி படையாட்சியார் பிறந்த நாள் விழா | மஞ்சக்குப்பம், கடலூர் மாவட்டம் |
| 55 | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்த நாள் விழா | ஈரோடு, ஈரோடு மாவட்டம் |
| 56 | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்த நாள் விழா | வைக்கம், கேரள மாநிலம் |
| 57 | செப்டம்பர் 24 | டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் பிறந்த நாள் விழா | திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம் |
| 58 | செப்டம்பர்25 | பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி பிறந்த நாள் விழா | உடுமலைப் பேட்டை, திருப்பூர் மாவட்டம் |
| 59 | அக்டோபர் 2 | அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழா | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 60 | அக்டோபர் 2 | அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா | அனைத்து மாவட்டங்கள் |
| 61 | அக்டோபர் 4 | தியாகி சுப்பிரமணிய சிவா பிறந்த நாள் விழா | பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம் |
| 62 | அக்டோபர் 4 | திருப்பூர் குமரன் பிறந்த நாள் விழா | திருப்பூர், திருப்பூர் மாவட்டம் |
| 63 | அக்டோபர் 4 | திருப்பூர் குமரன் பிறந்த நாள் விழா | சென்னிமலை, ஈரோடு மாவட்டம் |
| 64 | அக்டோபர் 7 | பரம்பிக்குளம் ஆழியாறு பாசன திட்ட தினம் | கோயம்புத்தூர் மாவட்டம் |
| 65 | அக்டோபர் 9 | பெரியவர் எம்.பக்தவத்சலம் பிறந்த நாள் விழா | காந்திமண்டபம் சென்னை மாவட்டம் |
| 66 | அக்டோபர் 10 | நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை பிறந்த நாள் விழா | நாமக்கல், நாமக்கல் மாவட்டம் |
| 67 | அக்டோபர் 23 | அமுதகவி உமறுப்புலவர் பிறந்த நாள் விழா | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழா | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 68 | அக்டோபர் 24 | மருதுபாண்டியர் நினைவு நாள் | திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம் |
| 69 | அக்டோபர் 30 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழா | பசும்பொன், இராமநாதபுரம் மாவட்டம் |
| 70 | நவம்பர் 1 | கன்னியாகுமரி மாவட்டம் தாய்த் தமிழ்நாட்டுடன் இணைந்த நாளை முன்னிட்டுமார்ஷல் நேசமணி அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் விழா | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 71 | நவம்பர் 11 | சுயமரியாதைச் சுடரொளி என்.ஜீவரத்தினம் பிறந்த நாள் விழா | இராயபுரம், சென்னை மாவட்டம் |
| 72 | நவம்பர் 15 | ராவ்பகதூர் குரூஸ் பர்ணாந்தீஸ் பிறந்த நாள் விழா | தூத்துக்குடி, தூத்துக்குடி மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழா | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 73 | டிசம்பர் 10 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா | தொரப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 74 | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 75 | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா | திருவல்லிக்கேணி சென்னை மாவட்டம் |
| 76 | டிசம்பர் 12 | அதங்கோட்டாசான் விழா | அதங்கோடு, கன்னியாகுமரி மாவட்டம் |
| 77 | டிசம்பர் 28 | சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் படைத் தளபதி வீரன் பொல்லான் பிறந்த நாள் விழா | மொடக்குறிச்சி, ஈரோடு மாவட்டம் |

# சிறப்பு விழாக்கள்

**கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரனார் அவர்களின் 150–வது பிறந்த நாள் விழா**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தியாகத்தின் திருவுருவான கப்பலோட்டியத் தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 150–வது பிறந்த திருநாள் அரசு சார்பில் எழுச்சியுடன் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்படும் என அறிவித்தார்கள். அதனைச் செயல்படுத்துகின்ற வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 5.9.2021 அன்று சென்னை துறைமுகம் வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

தியாக சீலர் வ.உ.சிதம்பரனார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் பொதிந்துகிடக்கும் அரிய நிகழ்வுகளை வெளிக்கொணரும் வகையில், தமிழ்நாட்டிலுள்ள பள்ளி மாணவ / மாணவியர் அனைவரும் பார்வையிட்டுப் பயன்பெறும் வகையில் நகரும் புகைப்படக்கண்காட்சி பேருந்தினையும் கடந்த 1.11.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னையில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்கள். இந்த நகரும் பேருந்து புகைப்படக்காட்சியை மாநிலம் முழுவதும் அனைத்து

மாவட்டங்களையும் சார்ந்த பள்ளி மாணாக்கர்கள் கண்டு களித்துப் பயனடைந்து வருகிறார்கள். இக்கண்காட்சியினை நாளது வரையில் 2,24,249 மாணவச் செல்வங்கள் கண்டுகளித்து பயன்பெற்று உள்ளனர்.

**மகாகவி பாரதியார் அவர்களின் 100–வது நினைவு நாள் நிகழ்ச்சிகள்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெரும்புலவன் பாரதி மறைந்த நூற்றாண்டின் பெருமையைப் போற்றும்வகையில், மகாகவி பாரதியாரின் நினைவு நாளான செப்டம்பர் 11–ஆம் நாளினை ‘மகாகவி நாளாக’ கடைபிடிக்கப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க, அதன் அடிப்படையில் அரசு ஆணை வெளியிடப்பட்டு அன்னாரின் திருவுருவச் சிலைக்கு அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பாரதியாரின் நினைவைப் போற்றும் வகையில் அவர் மறைந்த நூற்றாண்டின் நினைவாக 14 முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டார்கள். அவற்றில், பாரதியார் நினைவு நூற்றாண்டை முன்னிட்டு, அடுத்த ஓராண்டிற்கு சென்னை பாரதியார் நினைவு இல்லத்தில் வாரந்தோறும் நிகழ்ச்சி ஒன்று செய்தித் துறையினரால் நடத்தப்படும் என அறிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில், கடந்த 4.12.2021 சென்னை திருவல்லிக்கேணி பாரதியார் நினைவு இல்லத்தில் பெரும்புலவன் பாரதி மறைந்த நூற்றாண்டின் நினைவாக, அவரது பெருமைகளைப் புகழ்பாடும் வகையில் பள்ளி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள், கவியரங்கம், கருத்தரங்கம் போன்ற தொடர் நிகழ்ச்சிகள் செய்தித் துறையால் நடத்தப்பட்டு வருகின்றன. அதனையடுத்து, இந்நிகழ்ச்சி ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமையன்று சிறப்பாக நடைபெற்று வருகிறது.

**75–வது சுதந்திர நாள் விழா**

இந்திய விடுதலையின் 75–வது ஆண்டுக் கொண்டாட்டத்தை முன்னிட்டு 1.11.2021 அன்று சென்னை கோயம்பேடு புறநகர் பேருந்து நிலைய வளாகத்தில், இந்திய விடுதலைப் போரில் இன்னுயிர் ஈந்தும், இடுக்கண் ஏற்றும் சொல்லொணாத் தொல்லைகட்கு ஆட்பட்ட தீரத் தியாகிகளின் வீரப்பெருமைகளை நினைவுகூர்ந்து போற்றும் வகையில் ‘விடுதலைப் போரில் தமிழகம்’ என்ற மாபெரும் புகைப்படக் கண்காட்சியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து

வைத்தார்கள். 1.11.2021 முதல் 14.11.2021வரை 14 நாள்கள் நடைபெற்ற இக்கண்காட்சியில், இந்திய விடுதலைப் போராட்டங்களின் பல்வேறு வரலாற்றுத் தொகுப்புகள், சுதந்திரப் போட்டத்தில் பெண்களின் பங்களிப்பு போன்றவைகள் குறித்த புகைப்படங்களும், சுதந்திரப் போராட்டத்தில் பங்குபெற்று – மக்களால் இதுவரை அறியப்படாத தியாகிகளின் புகைப்படங்களும், சுதந்திரப் போராட்ட வீரர்களின் உருவம்பொறித்த பழைய நாணயங்கள், அஞ்சல் தலைகள், படங்கள் ஆகியவைகளும் இடம்பெற்றிருந்தன. இதனை பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்கள், போட்டித்தேர்வு எழுதும் மாணவர்கள் என ஏராளமான பொதுமக்கள் மிகுந்த ஆர்வத்துடன் பார்வையிட்டு மகிழ்ந்தனர். இக்கண்காட்சி பொதுமக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

தற்பொழுது, 75–வது சுதந்திரத் திருநாள் அமுதப்பெருவிழாவானது அனைத்து மாவட்டங்களிலும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில் தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது. இவ்விழாவில் செய்தி – மக்கள் தொடர்புத் துறையால் பல்துறை பணிவிளக்கக் கண்காட்சிகள் நடத்த ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூபாய் நான்கு இலட்சம்

என மொத்தம் 38 மாவட்டங்களுக்கு ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்திரெண்டு இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நடத்தப்பட்டு வருகிறது.

இந்திய விடுதலையின் 75–வது ஆண்டு விழாவினை ‘சுதந்திர திருநாள் அமுதப் பெருவிழா’ (Azadi Ka Amrit Mahotsav) என சென்னையில் கலாச்சார நிகழ்வுகளுடன் சுற்றுலாத்துறை, பள்ளிக் கல்வித்துறை, உயர்கல்வித் துறை ஆகிய துறைகளை ஒருங்கிணைத்து, மாரத்தான் ஓட்டம், கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி ஆகியவையும் நடத்தப்படுகின்றன. இப்போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிபெறும் மாணாக்கர்களுக்கு பரிசுகள் வழங்கிச் சிறப்பிக்கவும், ரூபாய் இரண்டு இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஏனைய விழாக்கள்**

அரியலூர் மாவட்டத்திலுள்ள கங்கைகொண்ட சோழபுரத்தில் ராஜேந்திர சோழன் பிறந்த நாளான ஆடி திருவாதிரை விழாவினை ஆண்டுதோறும் சுற்றுலா, பண்பாடு – அறநிலையங்கள் துறை மூலமாக அரசு விழாவாகக் கொண்டாட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

பரம்பிக்குளம் – ஆழியாறு பாசனத் திட்டத்தை அன்றைய இந்தியப் பிரதமர் பண்டித ஜவஹர்லால்

நேரு அவர்கள் தொடங்கிவைத்த 7.10.1961ஆம் நாளைப் 'பரம்பிக்குளம் – ஆழியாறு பாசனத் திட்ட தினம்' என அறிவித்து, ஆண்டுதோறும், இந்நாளில் மேனாள் சட்டமன்ற உறுப்பினர் வி.கே.பழனிசாமி கவுண்டர், மேனாள் அமைச்சர் சி.சுப்பிரமணியம், மேனாள் சட்டமன்ற உறுப்பினர் தொழிலதிபர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம், ஒன்றிய அரசின் மேனாள் நீர்வளத்துறை அமைச்சர் டாக்டர் கே.எல்.ராவ் ஆகியோரின் திருவுருவச் சிலைகளுக்கு அரசின் சார்பில் மாலையணிவித்து மரியாதை செலுத்திட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

தந்தை பெரியார் அவர்களுடைய பிறந்த நாளான செப்டம்பர் 17ஆம் தேதி சமூக நீதி நாளாக அறிவிக்கப்பட்டு விழா கொண்டாடப்பட்டது.

'கப்பலோட்டிய தமிழன்' வ.உ.சிதம்பரனார் அவர்கள் மறைந்த நவம்பர் 18–ஆம் தேதி தியாகத் திருநாளாக அறிவிக்கப்பட்டு கடந்த ஆண்டு அவரது நினைவு நாள் அரசு நிகழ்வாக அனுசரிக்கப்பட்டது.

டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளான ஏப்ரல் 14ஆம் தேதி சமத்துவ நாளாக அறிவிக்கப்பட்டு அன்று உறுமொழி ஏற்று விழா கொண்டாடப்பட்டது.

# களவிளம்பரம்

தமிழ்நாடு அரசின் திட்டங்களையும், சாதனைகளையும் அனைத்துத் தரப்பு மக்களும் அறிந்து பயன்பெறும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் விளம்பரப் பணிகளையும், தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறைகள் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு அரசின் நலத்திட்டங்களால் மக்கள் அடைந்துள்ள பயன்களை ஆவணப்படுத்தும் பணிகளையும் ஒருங்கிணைத்துச் செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, கள விளம்பரப் பிரிவு செயல்பட்டுவருகின்றது.

**மண்டல அலுவலர்கள்**

மாவட்டங்களில், செய்தி – மக்கள் தொடர்பு பணிகளைச் சிறப்பாக மேற்கொள்வதற்காக தமிழ்நாட்டிலுள்ள 38 மாவட்டங்களைச் சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், தஞ்சாவூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய 6 மண்டலங்களாகப் பிரித்து அம்மண்டலங்களுக்கு உட்பட்ட மாவட்டங்களில் அரசின் திட்டங்களை விரைவாகவும், சிறப்பாகவும் ஒருங்கிணைத்துச் செயல்படுத்துவதற்கு ஏதுவாக செய்தி – மக்கள் தொடர்புத் துறையிலிருந்து

அயற்பணியில் பணிபுரியும் ஆறு இணை இயக்குநர்கள் கூடுதலாக நியமிக்கப்பட்டுப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

**மின்னணு விளம்பரத் திரைக்காட்சி வாகனம்**

நவீனத் தொழில்நுட்ப முறையில் மின்னணுத் திரை பொருத்திய 32 மின்னணு விளம்பரத் திரைக்காட்சி வாகனங்கள் 32 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த மின்னணு விளம்பரத் திரைக்காட்சி வாகனங்கள், பகல், இரவு என்று எல்லா நேரங்களிலும் மக்கள் கூடும் இடங்கள், அரசு விழாக்கள் நடைபெறும் இடங்களில் அரசின் திட்டங்கள், சாதனைகள், அரசின் கொள்கைகள் மற்றும் அறிவிப்புகள் குறித்த விழிப்புணர்வுக் குறும்படங்களைத் திரையிட்டு மக்கள் அறியும் பணிகளைச் செவ்வனே மேற்கொண்டு வருகின்றன. ஆறு புதிய மாவட்டங்களுக்குப் புதிய மின்னணு விளம்பரத் திரைக்காட்சி வாகனங்கள் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மின்னணு விளம்பரத் திரைகள்**

செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள அரசின் சாதனைகள், திட்டங்களின் தொகுப்பு கொண்ட குறும்படங்கள், தொடர்ந்து பொதுமக்கள் அதிக அளவில் நாள்தோறும்

வந்து சென்றிடும் இடங்களான, தலைமைச் செயலகம், 32 மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், சென்னையில் உள்ள மூன்று வட்டாட்சியர் அலுவலகங்கள், புதுதில்லியிலுள்ள தமிழ்நாடு இல்லம் ஆகியவற்றில் 'மின்னணுத் திரை' (LED Screen) மூலம் திரையிடப்பட்டுக் கள விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வு மதிப்பீடு

மாவட்டச் செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்கள் ஆற்றும் ஒவ்வொரு பணிக்கும் தனித்தனி மதிப்பெண்கள் வழங்கப்பட்டு, அவர்களின் பணிகள் மாதந்தோறும், தலைமையிட உயர் அலுவலர்களைக் கொண்ட தனிக்குழுவினரால் தரமதிப்பீடு செய்யப்படுகின்றன. அவற்றில் செய்தியாளர் கூட்டங்கள் நடத்துதல், செய்தியாளர் பயணங்கள் ஏற்பாடு செய்தல், நாளிதழ்களில் அரசின் வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பான வெற்றிக் கதைகள் வெளிவரச் செய்தல், காணொலிக்காட்சிகள் நடத்துதல், திரையரங்குகளில் அரசின் செய்தி மலர் திரையிடுவதை ஆய்வு செய்தல், சிறப்பு வெளியீடுகள், கையேடுகள் உள்பட்ட பல்வேறு பணிகள் மாதந்தோறும் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

மாவட்ட செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்கள் மாவட்டங்களில் செவ்வனே பணிகளைத் திறம்பட மேற்கொள்ளவும், ஏனைய பிற மாவட்டங்களோடு ஒப்பீடு செய்து, நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கினை எளிதாக எய்திட, உத்வேகத்துடன் அவர்கள் பணியாற்றிடவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

# விளம்பரம்

தமிழக அரசின் சாதனைகள், திட்டங்கள், கொள்கைகள், சமூகநலப் பணிகளை, மக்கள் முழுமையாக அறிந்து பயன்பெறும் வகையில் இத்துறையின் மூலம் நாளிதழ்கள், காலமுறை இதழ்கள், மின்னணு ஊடகங்கள், சமூக ஊடகங்கள் ஆகியவற்றில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பணிகள், ஏனைய பணிகள் குறித்து ஒப்பந்தப்புள்ளி, வரைகலை, நில எடுப்பு விளம்பரங்கள் இத்துறையின் மூலம் நாளிதழ்களில் வெளியிடப்படுகின்றன.

அரசுத் துறைகள், வாரியங்கள், பல்கலைக்கழகங்கள், அரசு சார்ந்த நிறுவனங்கள் ஆகியவற்றின் விளம்பரங்களை, நாளிதழ்கள், காலமுறை இதழ்களில் வெளியிடும் மையமாகச் செய்தி – மக்கள் தொடர்புத் துறை செயல்பட்டு வருகிறது.

விளம்பரத்தின் தன்மை, அவை சென்றடைய வேண்டிய பகுதி, தகவல் கொண்டு போய்ச் சேர்க்கப்பட வேண்டிய மக்கள் தொகை ஆகியவற்றின்

அடிப்படையில் பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன.

**ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள்**

அரசு விளம்பரங்கள் மக்களை எளிதில் சென்றடையும் வகையில் கூடுதல் செலவு ஏதுமின்றி நவீன மின்னணுத் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி, அனைத்து ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்களும் தேசியத் தகவல் மையத்தின் (NIC) வழியாக www.tenders.tn.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்படுகின்றன. தேவைப்படுவோர் ஒப்பந்தப்புள்ளிப் படிவங்களை விலையேதுமின்றிப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள் அரசு நிருணயித்துள்ள கட்டணங்களில் விளம்பரங்களாக நாளிதழ்களிலும், இலவசமாக இணையதளத்திலும் வெளியிடப்படுவதால், அரசின் வெளிப்படையான நிருவாகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் பயனாக, தகுதியான அனைவரும், தமிழக அரசு கோரும் ஒப்பந்தப்புள்ளிகளில் பாகுபாடு இன்றி, தகுதிக்கு ஏற்ப பங்கேற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் கீழ்காணும் அட்டவணையில் உள்ளவாறு நாளிதழ்களில் விளம்பரமாக வெளியிடப்படுகிறது.

<table>
<tr><th colspan="3">செய்தித்தாள்களின் விவரம்</th><th colspan="2">கொள்முதல் மதிப்பு</th></tr>
<tr><th rowspan="2">பகுதி</th><th rowspan="2">ஆங்கிலம்</th><th rowspan="2">தமிழ்</th><th>சரக்கு/சேவை</th><th>பணிகள்</th></tr>
<tr><th>திருத்தப்பட்ட விதிமுறைகள்</th><th>திருத்தப் பட்ட விதி முறைகள்</th></tr>
<tr><td>(1)</td><td>(2)</td><td>(3)</td><td>(4)</td><td>(5)</td></tr>
<tr><td>மாவட்டம்</td><td>---</td><td>1<br>(மாவட்ட பதிப்பு)</td><td>ரூ.25 இலட்சத்திற்கு மேல்<br>ரூ.50 இலட்சம் வரை</td><td>ரூ.50 இலட்சத்திற்கு மேல்<br>ரூ.75 இலட்சம் வரை</td></tr>
<tr><td>மாநிலம்</td><td>1<br>(மாநிலத்தில் உள்ள அனைத்து பதிப்புகள்)</td><td>1<br>(மாநிலத்தில் உள்ள அனைத்து பதிப்புகள்)</td><td>ரூ.50 இலட்சத்திற்கு மேல்<br>ரூ.3 கோடி வரை</td><td>ரூ.75 இலட்சத்திற்கு மேல்<br>ரூ.10 கோடி வரை</td></tr>
<tr><td>தென் இந்தியா</td><td>1<br>(தென் இந்திய பதிப்பு)</td><td>1<br>(மாநிலத்தில் உள்ள அனைத்து பதிப்புகள்)</td><td>ரூ.3 கோடிக்கு மேல்<br>ரூ.5 கோடி வரை</td><td>ரூ.10 கோடிக்கு மேல்<br>ரூ.20 கோடி வரை</td></tr>
<tr><td rowspan="2">இந்தியா முழுவதும்</td><td>1<br>(இந்தியாவில் உள்ள அனைத்து பதிப்புகள்)</td><td>1<br>(மாநிலத்தில் உள்ள அனைத்து பதிப்புகள்)</td><td>ரூ.5 கோடிக்கு மேல்<br>ரூ.75 கோடி வரை</td><td>ரூ.20 கோடிக்கு மேல்<br>ரூ.100 கோடி வரை</td></tr>
<tr><td colspan="2">இந்திய வர்த்தக இதழ்</td><td>ரூ.75 கோடிக்கு மேல்</td><td>ரூ.100 கோடிக்கு மேல்</td></tr>
</table>

**ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள்**

அரசின் செயல்பாடுகள் அனைத்தும் வெளிப்படையாக இருத்தல் வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம், 2000ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் ஆகியன இயற்றப்பட்டு, அவற்றின் அடிப்படையில் பொதுமக்கள் அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில், மாவட்ட / மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள் வாரந்தோறும் வியாழக்கிழமை அன்று வெளியிடப்படுகின்றன.

இம்மலர்களில், ஒப்பந்தப்புள்ளிகள் மீது மேற்கொண்ட முடிவுகளும் வெளியிடப்பட்டு வருகின்றன.

இத்துறை சார்பாக ஒப்பந்தப் புள்ளிகள் இணையதளம் வழியாக விளம்பரம் பெறுதல், வெளியிடுதல் போன்ற பணிகள் செய்திட சிறப்பு மென்பொருளை தேசிய தகவல் மையம் (NIC) உருவாக்கி வருகிறது.

# பொருட்காட்சிப் பிரிவு

தமிழ்நாடு அரசின் பல்வேறு திட்டங்கள், சாதனைகள், செயல்பாடுகளை, அனைத்துத் தரப்பு மக்களும் அறிந்து பயன்பெறும்வகையில், செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் மூலம் மாவட்டங்களில் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பொருட்காட்சிகளில், அரசின் திட்டங்களும், சாதனைகளும் சிறந்த முறையில் விளம்பரப்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராம, நகர்ப்புர மக்கள், அரசுத் துறைகளின் திட்டங்களையும், சாதனைகளையும் அறிந்துகொண்டு, தேவையான தகவல்களைப் பெறுவதுடன், பொழுதுபோக்கு அம்சங்களையும் கண்டுகளித்து, புத்துணர்வு பெறுவதற்கு அரசுப் பொருட்காட்சிகள் வழிவகை செய்கின்றன.

அரசுப் பொருட்காட்சிகளில் ஒன்றிய, மாநில அரசுகளின் பல்வேறு துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் பங்கேற்கின்றன. இவ்வாறு அரசால் நடத்தப்படும் பொருட்காட்சிகள், மக்களுக்குப் பொழுதுபோக்காக அமைவதோடு, நேரடியாகவும் மறைமுகமாகவும் பலருக்கு

வேலைவாய்ப்பையும் அளித்துவருவது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், நலிந்த கலைஞர்களின் வாழ்க்கை வளம்பெறும் வகையில், நாள்தோறும் கலைநிகழ்ச்சிகள் நடத்தவும் இப்பொருட்காட்சிகளில் வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில், ஆண்டுதோறும் பத்து அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. மதுரை, கோயம்புத்தூர், சேலம், வேலூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய ஆறு மாவட்ட தலைநகரங்களிலும் ஏனைய, மாவட்ட மக்களும் பயன்பெறும் வகையில் சுழற்சி முறையில், நான்கு மாவட்டங்களிலும் என இந்தப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

1978ஆம் ஆண்டு முதல் இதுவரை, செய்தி – மக்கள் தொடர்புத் துறையால் இதுவரை 211 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு, அவற்றின் மூலம் அரசுக்கு ஏறத்தாழ ரூபாய் முப்பத்தெட்டு கோடியே தொன்னூற்று மூன்று இலட்சத்து தொன்னூற்று நான்காயிரம் நிகர வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது.

கொரோனா பெருந்தொற்று காரணமாக மார்ச் 2020 முதல் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படவில்லை. தற்போது கொரானா பெருந்தொற்று குறைந்துள்ள காரணத்தினால் அரசின்

வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி அரசு, தனியார் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**தனியார் பொருட்காட்சிகள்**

மாவட்டங்களில் நடத்தப்படும் தனியார் பொருட்காட்சிகளுக்கான அனுமதி இத்துறையால் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவரின் பரிந்துரையுடனும், உரிய பிற துறைகளின் பாதுகாப்பு, தடையில்லாச் சான்றிதழ், அரசால் நிர்ணயிக்கப்பட்ட முதலமைச்சர் நிவாரண நிதிக்கான காசோலை ஆகியன பெறப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

**விடுதலைப் போரில் தமிழகம் – புகைப்படக் கண்காட்சி**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1.11.2021 அன்று சென்னை, கோயம்பேடு புறநகர்ப் பேருந்துநிலைய வளாகத்தில், 75வது சுதந்திரத் திருநாள் கொண்டாட்டத்தின் தொடர்ச்சியாக, இந்திய விடுதலைப் போரில் இன்னுயிர் ஈந்தும், இடுக்கண் ஏற்றும், சொல்லொணாத் தொல்லைகளுக்கு ஆட்பட்ட தீரத் தியாகிகளின் வீரப்பெருமைகளை நினைவு கூர்ந்து போற்றும்வகையில் ‘விடுதலைப் போரில் தமிழகம்’ என்ற மாபெரும் புகைப்படக் கண்காட்சியினைத் திறந்துவைத்தார்கள். 1.11.2021 முதல் 14.11.2021 வரை 14 நாட்கள் நடைபெற்ற இக்கண்காட்சியில், இந்திய விடுதலைப் போராட்டங்களின் பல்வேறு வரலாற்றுத் தொகுப்புகள்,

சுதந்திரப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு போன்றவை குறித்த புகைப்படங்கள், குறிப்புகள், சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெற்றும், மக்களால் இதுவரை அறியப்படாத தியாகிகளின் புகைப்படங்கள், குறிப்புகள், சுதந்திரப் போராட்ட வீரர்களின் உருவம் பொறித்த பழைய நாணயங்கள், அஞ்சல் தலைகள், படங்கள் ஆகியவை இடம் பெற்றிருந்தன. இதனை ஏராளமான பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், போட்டித் தேர்வு எழுதும் மாணவர்கள் என ஏராளமானோர் மிகுந்த ஆர்வத்துடன் பார்வையிட்டு மகிழ்ந்தனர். இக்கண்காட்சி பொதுமக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

**புதுதில்லி மலர்ப்பேரணி**

புதுதில்லியில் ஆண்டுதோறும் தேசிய ஒருமைப்பாடு, மத நல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில், மலர்ப்பேரணி விழாவில் தமிழ்நாடு அரசின் சார்பில், செய்தி – மக்கள் தொடர்புத் துறை பங்கேற்று வருகிறது. கடந்த ஆண்டுகளில் கொரோனாப் பெருந்தொற்று காரணமாக இந்நிகழ்ச்சி நடைபெறவில்லை.

**குடியரசு நாள் விழா அலங்கார ஊர்திகள்**

புதுதில்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் குடியரசு நாள் விழாவில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் தமிழ்நாடு அரசின் சார்பில்,

செய்தி – மக்கள் தொடர்புத் துறை பங்கேற்று, அந்தந்த ஆண்டுகளில் வழங்கப்படும் கருப்பொருளுக்கு ஏற்ப, அலங்கார ஊர்திகளை வடிவமைத்தும், தேர்ச்சி பெற்ற கலைஞர்களைக் கொண்டு கலைநிகழ்ச்சிகள் நடத்தியும், தமிழகத்திற்குப் பெருமை சேர்த்துவருகிறது.

சென்னையில் நடைபெறும் குடியரசு நாள் விழாவில், தமிழக அரசின் பல்வேறு திட்டங்கள், சாதனைகளை வெளிப்படுத்தும் வகையில் செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தனி அலங்கார ஊர்தி அமைப்பதுடன், அரசின் பல துறைகளின் சார்பில் வடிவமைக்கப்படும் அலங்கார ஊர்திகளின் வடிவமைப்புகள், அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு ஆகியவற்றின் ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்வதும் இத்துறையின் முக்கியப் பணிகளில் ஒன்றாகும்.

**2022ஆம் அண்டு குடியரசு நாள் அணிவகுப்பு**

இந்த ஆண்டு 26.1.2022 அன்று சென்னையில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவில், செய்தி – மக்கள் தொடர்புத் துறை சார்பில், விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்களிப்பினைச் சிறப்பாக வெளிப்படுத்தும் வகையில், தியாகசீலர்களின் பெருமைகளைச் சொல்லும் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு சிறப்பாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மூன்று அலங்கார ஊர்திகளையும் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்றுவர

ஏதுவாக அன்றைக்கே சென்னை, தீவுத்திடலில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொடியசைத்துத் தொடங்கி வைக்கப்பட்டது.

**முதல் அலங்கார ஊர்தி**

இந்த ஊர்தியின் முகப்பில் தமிழகத்தில் வேலூர் கோட்டையில் 1806ஆம் ஆண்டு நடைபெற்ற சிப்பாய்ப்புரட்சி, ஆங்கிலேயர்களை எதிர்த்து வீரத்துடன் போர்புரிந்த மருது சகோதரர்கள், சிவகங்கையை மீட்ட வீரமங்கை வேலு நாச்சியார், வீரமங்கை வேலு நாச்சியாரின் போர்ப்படையில் பெண்கள் படைக்குத் தலைமையேற்று, வெள்ளையர்களின் ஆயுதக் கிடங்கினை அழித்துத் தன்னுயிரைத் தியாகம் செய்த வீராங்கனை குயிலி, பரங்கியரின் ஆதிக்கத்திற்குச் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்ததோடு, ஆங்கிலேயர்களின் ஆட்சியினை எதிர்த்து முதன் முதலில் தீரமாய்ப் போரிட்டுத் தூக்குக் கயிற்றினை வீரத்துடன் ஏற்றுக் கொண்ட விடுதலைப் போராட்ட மாவீரர் வீரபாண்டிய கட்டபொம்மன், அவரது படையில் தளபதியாக விளங்கிய தூத்துக்குடி மாவட்டம் கவர்னகிரி வீரன் சுந்தரலிங்கம், அன்னியப் படைகளைத் தனியாகச் சென்று அழித்த நெற்கட்டும் செவலைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒண்டிவீரன், இந்திய விடுதலை வரலாற்றில் 'வெள்ளையனே வெளியேறு' என்று முதன்முதலாக வீரமுழக்கமிட்ட நெற்கட்டும் செவல் மாவீரன் பூலித்தேவன்,

பாளையக்காரர்கள் ஆங்கிலேயர்களுக்குக் கப்பம் கட்டுவதைத் தடுத்த கட்டாலங்குளம் மன்னர் மாவீரன் அழகுமுத்துக்கோன், வெள்ளையர்களை எதிர்த்துத் தீரத்துடன் போரிட்டு, தூக்கிலிடப்பட்ட மாவீரர்கள் மருது சகோதரர்கள், அவர்கள் உருவாக்கிய காளையார்கோயில் கோபுரம் என, சுதந்திரப் போராட்ட வீரர்களைப் போற்றும் வகையில் அலங்கார ஊர்திகளில் சிலைகளின் மாதிரிகள் வடிவமைக்கப்பட்டிருந்தன.

**இரண்டாவது அலங்கார ஊர்தி**

இந்த ஊர்தியில், ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிராகத் தனது புரட்சிகரக் கவிதைகளால் விடுதலை வேள்விக்கு வித்திட்டவரும் சுதந்திரத்திற்காக மட்டுமின்றி சமத்துவம், சமூக விழிப்புணர்வு, பெண் விடுதலைக்காகப் போராடிய பெரும்புலவன் மகாகவி பாரதியார், ஆங்கிலேயரின் கப்பல் வணிகத்திற்குப் போட்டியாக முதல் உள்நாட்டு இந்தியக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கியவரும், எஸ்.எஸ். காலியோ, எஸ்.எஸ்.லாவோ ஆகிய பிரெஞ்சுக் கப்பல்களை வாங்கியதால், தேசத் துரோகியாகக் குற்றம் சாட்டப்பட்டு, இரட்டைத் தீவாந்திர தண்டனை பெற்றவருமான, ‘செக்கிழுத்த செம்மல்’ வ.உ. சிதம்பரனார், விடுதலைக்காகப் போராடியவரும், ‘ஞானபானு’ மற்றும் ‘பிரபஞ்சமித்திரன்’ ஆகிய பத்திரிகைகளைத் தொடங்கி, தேசத் தலைவர்களின்

அரிய தொண்டினை வெளியிட்டுத் தமிழகத்தில் விடுதலைத் தாகத்திற்கு வித்திட்ட தியாகி சுப்பிரமணிய சிவா, சுதந்திரப் போராட்டத்திற்காகப் போராடியவரும், சமூக சீர்திருத்தவாதியுமான சேலம் விஜயராகவாச்சாரி போன்ற சுதந்திரப் போராட்ட வீரர்களைப் போற்றும் வகையில் அலங்கார ஊர்திகளில் அவர்களின் சிலைகள் மாதிரிகள் வடிவமைக்கப்பட்டிருந்தது.

**மூன்றாவது அலங்கார ஊர்தி**

இந்த ஊர்தியில், சத்தியாக்கிரக அறப்போராட்டம் நடத்தியவரும், சமூகச் சீர்திருத்தத்திற்காகவும், பெண் விடுதலைக்காகவும் தீண்டாமையை வேரறுக்கவும் அரும்பாடுபட்ட பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று ஒத்துழையாமை இயக்கம், சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபட்ட மூதறிஞர் இராஜாஜி, தேசியமும் தெய்வீகமும் எனது இரு கண்கள் என முழங்கிய பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், ஏழை எளிய மக்கள் ஏற்றம் பெற்றிட எந்நாளும் உழைத்திட்ட கர்மவீரர் காமராஜர், சமூக சீர்திருத்தச் செயல்பாட்டாளர் இரட்டைமலை சீனிவாசன், கலெக்டர் ஆஷ் துரையைக் கொன்று தன்னுயிரை மாய்த்துக்கொண்ட வீரன் வாஞ்சிநாதன், அந்நியர்களை வீரத்துடன் எதிர்த்துப் போரிட்ட தீரன் சின்னமலை, மாவீரன் பொல்லான், கொடிகாத்த திருப்பூர் குமரன், விடுதலைக்காக முதன்மைப் பங்காற்றியவரும் சிறந்த இலக்கியவாதியுமான

திருச்சிராப்பள்ளி வ.வே.சு. ஐயர், அனைவராலும் போற்றப்பட்ட கண்ணியமிகு காயிதேமில்லத், அண்ணல் காந்தியடிகளின் பொருளாதார ஆலோசகராகவும் சிறைத் தண்டனை பெற்றவருமான ஜே.சி. குமரப்பா, தியாகச் சீலர் கக்கன், கடலூர் அஞ்சலையம்மாள் ஆகியோரின் புகழினை வெளிப்படுத்துகின்ற வகையில் அலங்கார ஊர்திகளில் சிலைகளின் மாதிரிகள் வடிவமைக்கப்பட்டிருந்தன.

இந்த அலங்கார ஊர்திகள் தமிழ்நாட்டின் பெரும்பான்மையான மாவட்டங்களுக்குச் சென்று வந்தடைந்தன. இம்மூன்று அலங்கார ஊர்திகளும் மாவட்டங்களுக்குச் சென்றபோது மாவட்டங்களிலுள்ள மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், முக்கியப் பிரமுகர்கள், உயர் அலுவலர்கள், பொதுமக்கள் என அனைத்து தரப்பினரும் மலர்தூவி வரவேற்றனர். சென்னை வந்தடைந்த இந்த ஊர்திகள் சென்னை, விவேகானந்தர் இல்லம் எதிரில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இதனை ஏராளமான பொதுமக்கள், பள்ளி மாணவ, மாணவிகள் கண்டுகளித்தனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இவ்வலங்கார ஊர்திகளைப் பார்வையிட வந்தபோது அங்கிருந்த பள்ளி மாணாக்கர்களுடன் கலந்துரையாடினார்கள். இதனைப் பார்வையிட்ட பொதுமக்கள் தமிழ்நாடு அரசினையும் மாண்புமிகு

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் உளமாரப் பாராட்டினார்கள்.

**அகில இந்திய சுற்றுலா – தொழில் வர்த்தகப் பொருட்காட்சி**

ஒவ்வோர் ஆண்டும் சென்னையில் நடைபெறும் அகில இந்திய சுற்றுலா – தொழில் வர்த்தகப் பொருட்காட்சியில், செய்தி – மக்கள் தொடர்புத் துறை தொடர்ந்து பங்கேற்று, அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளைப் பொதுமக்கள் எளிதில் அறிந்திடும் வகையிலும், விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற வகையிலும் சிறப்பான முறையில் அரங்குகள் அமைத்து பாராட்டுகளைப் பெற்று வருகிறது.

**புதுதில்லி பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி**

புதுதில்லியில், ஆண்டுதோறும் நடைபெறும் அகில இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில், தமிழ்நாடு அரசு சார்பில் செய்தி – மக்கள் தொடர்புத் துறை ஒவ்வோர் ஆண்டும் பங்கேற்று, தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகள் தொடர்பான சாதனைகள், திட்டப்பணிகள், கொள்கை விளக்கங்கள், மேம்பாட்டுப் பணிகள் குறித்த விளக்கப் புகைப்படங்கள், காட்சிப் பொருட்களைக் காண்போரைக் கவரும்வகையில் அமைத்து, அனைத்துத் தரப்பு மக்களும் தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்கள், சாதனைகள், சிறப்புகளை அறிந்துகொள்ளவும், பயனாளிகள் நலத்திட்ட

உதவிகளைப் பெறுவதற்கான வழிமுறைகளை அறியும்வகையிலும் அரங்குகளை அமைத்து வருகிறது.

இந்தியாவிலுள்ள பிற மாநிலங்கள், தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்கள், சாதனைகளை அறிந்துகொள்ள ஏதுவாக அகில இந்திய அளவில் நடைபெறும் இப்பொருட்காட்சி அமைந்துள்ளது. மேலும், நம் மாநில மகளிர் சுயஉதவிக் குழுக்களால் உருவாக்கப்படும் கைவினைப் பொருட்களை விற்பனை செய்ய, அகில இந்திய அளவில் வணிக வாய்ப்பு அமைத்துக் கொடுக்கப்படுகிறது.

**ஊராட்சி ஒன்றியங்களில் கண்காட்சிகள்**

தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்கள், சாதனைகள் குறித்துப் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், தமிழ்நாட்டில் சென்னை மாவட்டத்தைத் தவிர்த்து, பிற மாவட்டங்களில் உள்ள 388 ஊராட்சி ஒன்றியங்களிலும், ரூபாய் பத்தாயிரம் வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசின் சாதனைகளை விளக்கும் வகையில், சிறு கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. கடந்த ஆண்டு கொரோனா பெருந்தொற்று காரணமாக இந்நிகழ்ச்சிகள் நடைபெறவில்லை.

**சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சி**

தமிழ்நாடு அரசின் சாதனைகளைப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு, சென்னை உட்பட, அனைத்து மாவட்டங்களிலும் ஆண்டிற்கு ஒரு முறை அரசு சாதனைவிளக்கப் புகைப்படக் கண்காட்சி நடத்த, மாவட்டம் ஒன்றிற்கு தலா ரூபாய் பத்தாயிரம் வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசு சாதனைவிளக்கப் புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**திருவிழாக்கள், அரசு விழாக்களில் சிறப்புப் புகைப்படக் கண்காட்சி**

மாவட்டந்தோறும் திருவிழாக்கள், அரசு விழாக்களில் அரசின் சாதனைகள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்புகைப்படக் கண்காட்சிகள் அரசின் திட்டங்கள், சாதனைகளை அனைத்துத் தரப்பு மக்களும் அறிந்து பயன்பெறுவதற்கு ஒரு நல்வாய்ப்பாக அமைகிறது.

**நலிவுற்ற கலைஞர்களுக்கு மதிப்பூதியம்**

நலிவுற்ற கலைஞர்களின் வாழ்க்கை வளம்பெறும் வகையில் அரசுப் பொருட்காட்சிகளில் நடத்தப்படும் விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகளுக்கு மதிப்பூதியமாக ரூபாய் ஐந்தாயிரம் வழங்கப்பட்டு வருகிறது.

# மாவட்ட செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகங்கள்

தமிழகத்தின் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகங்களில் செயல்படும் செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகம், செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் இன்றியமையாத அங்கமாகும். அரசின் திட்டங்கள், வளர்ச்சிப் பணிகளை மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் கொண்டுசேர்க்கும் சிறப்பான பணியை மாவட்டச் செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி), உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (விளம்பரம்), தேவையான பணியாளர்கள் கட்டமைப்புடன் இயங்கிவரும் மாவட்டச் செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகங்கள் அரசினால் செயல்படுத்தப்படும் மக்கள் நலத்திட்டங்கள், அரசின் சாதனைகள், புதிய அறிவிப்புகள் ஆகியவற்றை உடனுக்குடன் மக்களுக்குக் கொண்டுசெல்லும் பணியைச் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றன.

மேலும், அரசின் திட்டங்கள் அனைத்தும், அனைத்துத் தரப்பு மக்களிடமும் எடுத்துச் சென்றிடும் வகையில், நாளிதழ்கள், ஊடகங்கள், மின்னணு விளம்பரத்திரை காட்சிவாகனப் படக்காட்சிகள், புகைப்படக் கண்காட்சிகள் ஆகியவற்றின் வாயிலாக, களவிளம்பரப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், முக்கிய பிரமுகர்கள் பங்கேற்கும் அரசு விழாக்களுக்கான முன்னேற்பாடு, செய்தியாளர் சந்திப்பு, செய்தியாளர் பயண ஏற்பாடு, தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி நிறுவனம் வாயிலாக விளம்பரப்பணி, பல்துறை பணிவிளக்கக் கண்காட்சிகள், வரலாற்றுத் தலைவர்களின் நினைவகங்களைப் பராமரித்தல் உள்பட்ட பல முக்கியப் பணிகளையும் மேற்கொண்டு, அரசின் மக்கள் நலத்திட்டங்கள், சாதனைகளை மக்கள் அறிந்துகொள்ளும் வகையிலான பணிகளை மாவட்ட செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகங்கள் செயல்படுத்தி வருகின்றன.

**செய்தி நிலையங்கள்**

செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் புதுதில்லி ஆகிய இடங்களில் செய்தி நிலையங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

செய்தி நிலையங்களில் மொழி, இலக்கியம், வரலாறு, அறிவியல் உள்பட்ட பல்வேறு தலைப்புகளில் நூல்கள், நாளிதழ்கள், காலமுறை இதழ்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளன. மேலும், இச்செய்திநிலையங்களில் வைக்கப்பட்டுள்ள புத்தகங்களை ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள் பயன்படுத்திப் பயனடைந்து வருகிறார்கள்.

# மாநிலச் செய்தி நிலையம் – சென்னை

செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ், சென்னையில் மாநிலச் செய்தி நிலையம் சென்னை கலைவாணர் அரங்க வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மாநிலச் செய்தி நிலையத்தில் அனைவரும் படித்துப் பயன்பெறும் வகையில், ஒரு நூலகம் செயல்பட்டு வருகிறது. இந்நூலகம் அரசு விடுமுறை நாட்கள் தவிர்த்து அனைத்து வேலை நாட்களிலும் காலை 9.45 மணி முதல் மாலை 5.45 மணி வரை செயல்பட்டு வருகிறது. இந்நூலகத்தில் தமிழ்மொழி இலக்கியம், அறிவியல், ஆய்வுக் கட்டுரைகள், சட்டம், மருத்துவம், உளவியல், ஆன்மிகம், ஜோதிடம், உடற்பயிற்சி, யோகா, வரலாறு, அரசியல், பண்பாடு, தலைவர்களின் வாழ்க்கை வரலாறு உள்பட்ட நூல்கள், நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் மற்றும் அனைத்து விதமான போட்டித் தேர்வுகளுக்குத் தேவையான குறிப்புகள் அடங்கிய நூல்கள் என பல்வேறு தலைப்புகளில் தமிழ், ஆங்கில மொழிகளில் 68,560 நூல்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூல்களை பொதுமக்கள், அறிஞர்கள், கலைஞர்கள், சமூக ஆர்வலர்கள், மாணவர்கள், கல்லூரிப்

பேராசிரியர்கள் உள்பட்ட அனைத்துத் தரப்பினரும் படித்துப் பயன்பெறும் வகையில் அமைதியான சூழ்நிலையில் இடவசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், இந்நூலகத்தில் தமிழ், ஆங்கில நாளிதழ்கள், பருவ இதழ்கள், வார இதழ்களும் படித்துப் பயன்பெறுவதற்காக வைக்கப்பட்டுள்ளன. சட்டமன்றப் பேரவை நடவடிக்கை தொடர்பான குறிப்புகள், பேரவை வெளியீடுகள், அரசுத்துறை வெளியீடுகள் ஆகியவை தொகுக்கப்பட்டு மேற்கோள் பணிக்காக சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

பள்ளி, கல்லூரி மாணவர்கள் தங்கள் கல்விக்குத் தேவையான குறிப்புகள் எடுக்கவும் பள்ளி – கல்லூரிகளில் நடத்தப்படும் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, வினாடி வினா போன்ற பல்வேறு இலக்கியப் போட்டிகளில் பங்கேற்றிடத் தேவையான குறிப்புகள் எடுக்கவும் இந்நூலகத்திற்குப் பெருமளவில் வருகை புரிகின்றனர்.

மேலும், போட்டித் தேர்வுகளில் பங்குபெறும் மாணவர்களின் பயன்பாட்டிற்காக பல்வேறு வகை போட்டித் தேர்வு நூல்கள் சிறப்பாக இந்நூலகத்தில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

அரசின் பல்வேறு துறைகள், ஆராய்ச்சி மாணவர்களின் பயன்பாட்டிற்காக இரண்டு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட செய்தித்தாள்களும், பருவ, இதழ்களும், காலமுறை வெளியீடுகளும் இங்குப் பாதுகாத்து வைக்கப்பட்டு வருகின்றன.

இந்த மாநிலச் செய்தி நிலைய நூலகத்தில் பல்வேறு பதிப்பகங்களின் வாயிலாக வெளியிடப்படும் புத்தகங்களின் இரண்டு பிரதிகள் பதிப்புரிமைப் பதிவுப் பணிக்காகப் பெறப்பட்டு, அந்நூல்களில் இடம்பெற்றுள்ள பதிப்புரிமை தொடர்பான தகவல்கள் மட்டும் முறையாகப் பதிவு செய்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

இச்செய்தி நிலையத்தில் 68,560 நூல்கள் இடம்பெற்றுள்ளதால், இங்கு வருகை தரும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர் மற்றும் பொதுமக்கள் தாங்கள் தெரிவுசெய்து படிக்க விரும்பும் குறிப்பிட்ட நூல்களை விரைவாகவும் எளிதாகவும் தேர்ந்தெடுக்கும் வகையில், இணையதள வசதியுடன் சுமார் ரூபாய் மூன்று இலட்சத்து அறுபதாயிரம் மதிப்பீட்டில் நவீன மென்பொருள் வசதி புதியதாக வடிவமைக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருவது இந்நூலகத்தின் சிறப்பம்சமாகும்.

மேலும், இத்தகைய நூல்களை வருங்காலச் சந்ததிகள் படித்து அறிந்துகொள்ளும் வகையில் அவற்றைப் பாதுகாத்திட தமிழக அரசின் ‘மின் நூலகம் அமைத்தல்’ எனும் திட்டத்தின்படி பொது நூலக இயக்கத்தின் சார்பில், அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் மூலமாக மாநிலச் செய்தி நிலையத்தில் உள்ள நூல்களில் சுமார் 2500 நூல்கள் தெரிவுசெய்யப்பட்டு, அதில் 1800 நூல்கள் காப்புரிமை சட்டத்திற்கு உட்படாத வெளியீடுகள் மின்னுருவாக்கம் செய்யப்பட்டுள்ளன.

இங்குள்ள நூல்கள், ஆவணங்களை அருகில் அமைந்துள்ள சென்னைப் பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் அதிக அளவில் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## தகவல் மையம், தமிழ்நாடு இல்லம், புதுதில்லி

புதுதில்லி வைகை தமிழ்நாடு இல்லத்தில் 1993ஆம் ஆண்டு முதல், தகவல் மையம் உருவாக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இத்தகவல் மையத்தில், உதவி இயக்குநர், மக்கள் தொடர்பு அலுவலர், தகவல் அலுவலர், அலுவலக உதவியாளர், ஓட்டுநர், புகைப்படக்காரர், ஒளிப்பதிவாளர் ஆகிய பணியிடங்கள் உள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் புதுதில்லிக்கு வருகைபுரிந்து, மாண்புமிகு குடியரசுத் தலைவர், மாண்புமிகு இந்தியப் பிரதமர், மாண்புமிகு ஒன்றிய அமைச்சர்கள் ஆகியோருடனான சந்திப்பின்போது எடுக்கப்படும் புகைப்படங்கள், காட்சிப்படங்களைச் சேகரிப்பதற்காக இத்தகவல் மையம் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அலுவலகம், இந்தியக் குடியரசுத் தலைவரின் செய்திச் செயலாளரின் அலுவலகம், ஒன்றிய அமைச்சர்களின் அலுவலகம் ஆகியவற்றுடன் தொடர்புகொண்டு புகைப்படங்கள், காட்சிப்படங்களைப் பெற்று பத்திரிகை

மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு வெளியிடும் பணியை மேற்கொள்கிறது.

இவைதவிர, புதுதில்லியில் ஒவ்வோர் ஆண்டும் நடைபெறும் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் தமிழக அரசின் பங்கேற்பை ஒருங்கிணைக்கும் பணி, குடியரசு நாள் கொண்டாட்டத்தின்போது தமிழக அரசின் குடியரசு நாள் அலங்கார வாகனம் கட்டமைத்து இயக்கப்படும் நிகழ்வில், பாதுகாப்பு அமைச்சகத்துடன் ஒருங்கிணைக்கும் பணி, மத நல்லிணக்க மலர்ப்பதாகை ஊர்வல நிகழ்ச்சியில் ('phool walon ki seir') தமிழக அரசின் பங்கேற்பை ஒருங்கிணைக்கும் பணி ஆகியவற்றை இத்தகவல் மையம் மேற்கொண்டு வருகிறது.

மேலும், ஆண்டுதோறும் பாதுகாப்பு அமைச்சகத்தால் ஆகஸ்டு 15 அன்று ஏற்பாடு செய்யப்படும் சுதந்திர நாள் நிகழ்ச்சிகளுக்காக உள்ளுறை ஆணையர் அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து பாரத்பர்வ், செங்கோட்டை நிகழ்வுகளில் பங்கேற்றல், தமிழ்நாடு இல்லத்தில் ‘பொங்கல்விழா’ மற்றும் ‘தமிழ்நாடு நாள்நிகழ்ச்சிகள்’ ஆகியவற்றை உள்ளுறை ஆணையர் அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து நடத்துதல். மாண்புமிகு தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி,

உள்ளுறை ஆணையர்களின் அனைத்து பொது நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தல் ஆகிய பணிகளை இத்தகவல் மையம் மேற்கொண்டு வருகிறது.

இதேபோன்று, இத்தகவல் மையம், இந்திய அரசாங்கத்தின் ஒன்றிய அமைச்சகங்கள் மூலம் நினைவு நாணயங்கள் வெளியீடு, தபால் தலைகள் வெளியீடு போன்ற பணிகளில் தமிழக அரசின் செய்தி – மக்கள் தொடர்புத் துறைக்குத் தொடர்பு அலுவலகமாகவும், செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் உச்சநீதிமன்ற வழக்குகள் தொடர்பான அலுவல் பணிகளை மேற்கொள்ளல். நடப்பு விவகாரங்கள், அரசு, நீதித்துறை, அரசியல் முன்னேற்றங்கள், சமூகவலை தளங்களின் போக்கு பற்றிய முக்கியத் தகவல்களைச் செய்தி – மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், உள்ளுறை ஆணையர்கள் ஆகியோருக்கு அவசியத்தின் அடிப்படையில் வழங்குதல், தமிழ்நாடு இல்லத்தில் மின்னணு விளம்பரத்திரையில் காட்சிப்படங்கள் புகைப்படக் காட்சிகளைப் பராமரித்தல், புதுப்பித்தல் ஆகிய பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

மேலும், ஊடகத்தினரின் பணி நோக்கத்திற்காகப் புதுதில்லி வைகை தமிழ்நாடு இல்லத்தில் ஒரு ஊடக மையம் இத்தகவல் மையத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

# தமிழரசு

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் அளப்பரிய ஆர்வத்தாலும், முயற்சியாலும், பல்வேறு வெளியீடுகளாக வெளியிடப்பட்டு வந்த இதழ்களை ஒருங்கிணைத்து தமிழ்நாடு அரசின், செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் ‘தமிழரசு’ என்ற புதிய இதழ் தோற்றுவிக்கப்பட்டு, ஜூலை 1, 1970ஆம் ஆண்டு, முதல் இதழ் வெளியிடப்பட்டது. ‘தமிழரசு’ இதழ், தமிழ், ஆங்கிலத்தில் மாதந்தோறும் வெளியிடப்பட்டு வருகிறது. ‘தமிழரசு’ இதழ் – அரசின் கொள்கைகள், திட்டங்கள், ஏழை, எளிய மக்களுக்காக அரசு செயல்படுத்தும் அனைத்து மக்கள் நலத்திட்டங்களையும், திட்டங்களின் சாதனைகளையும் தொகுத்து இதழ் வடிவில் வெளியிடுவதால் தமிழக அரசின் அச்சு ஊடகமாகத் திகழ்கிறது.

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் உரைகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகளின் தொகுப்புகள், அனைத்துத் துறைகளின் சார்பில் அறிவிக்கப்பட்டத் திட்டங்கள், அனைத்துத்

துறை சார்ந்த அறிவிப்புகள், மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்த விரிவான கட்டுரைகள், மாநிலம் முழுவதிலும் அரசு நலத்திட்டங்களால் பயன்பெற்ற பயனாளிகளின் நேர்காணல்கள் அடங்கிய வெற்றிக்கதைகள் ஆகியவற்றை அனைத்துத் தரப்பினரும் படித்துப் பயனடைந்திடும் வகையில் ‘தமிழரசு’ இதழில் வெளியிடப்படுகின்றன. மேலும், விடுதலைப் போராட்ட வீரர்கள், தமிழ்ச் சான்றோர்கள், அரசியல் தலைவர்கள் ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய மடிப்பேடுகள் தயாரித்து அச்சடிக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்காக விநியோகிக்கப்படுகின்றன.

**சிறப்பு வெளியீடுகள் வெளியிடப்பட்ட விவரங்கள்**

1. மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் உரை மீதான விவாதத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை
2. ‘தலைநிமிரும் தமிழகம் – நூற்றாண்டின் திசையில் நூறு நாட்கள்’ எனும் 100 நாள் சாதனை மலர்.
3. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன் கீழ் அறிவித்த அறிவிப்புகள் (24.08.2021 முதல் 13.09.2021 வரை)

4. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின்போது அறிவிக்கப்பட்ட துறைவாரியான அறிவிப்புகள் (13.08.2021 முதல் 13.09.2021 வரை)
5. 'நாவலர் டாக்டர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள்' – நூற்றாண்டு நிறைவு விழா சிலைத் திறப்பு சிறப்பு மலர்

**மடிப்பேடுகள்**

6. கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார், மகாகவி சுப்பிரமணிய பாரதியார், நடிகர் திலகம் செவாலியே சிவாஜி கணேசன் ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்புகள், வள்ளுவர் கோட்டம் பற்றிய குறிப்புகள், இந்தியப் பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சி 2021 (India International Trade Fair 2021) பற்றிய குறிப்புகள் அச்சடிக்கப்பட்டு வழங்கப்பட்டன.

**சுவரொட்டிகள்**

தமிழரசு அச்சகத்தின் வாயிலாக, தலை நிமிரும் தமிழகம் – பேரு சொல்லும் நூறு நாட்கள் என்ற தலைப்பில் அரசின் சாதனைகளை விளக்கும் ஐந்து வகையான சுவரொட்டிகள் அச்சடிக்கப்பட்டு அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கு முக்கிய இடங்களில் ஒட்டப்பட்டுள்ளன.

செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் சிறுதொலைபேசிக் கையேடு, செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் இதரப் பிரிவுகளுக்குரிய விண்ணப்பங்கள், படிவங்கள் ஆகியவை அச்சிடப்பட்டு வழங்கப்பட்டன.

மேலும், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் சார்பாக Aadhaar Enrolment/Correction/Update Form படிவம், இந்து சமய அறநிலையத் துறையின் மூலம் மறுபதிப்புக்காகப் பெறப்பட்ட 'இந்து மத இணைப்பு விளக்கப் புத்தகம், சைவமும் வைணவமும் புத்தகம்'. தமிழ் இணையக் கல்விக் கழகம் சார்பாக கணினித் தமிழ் வளர்ச்சியும் சவால்களும் மாநாட்டு ஆய்வுக்கட்டுரை தொகுப்பு – 1 & 2, 'திரைப்படத் துறையினர் நல வாரியம் தொடர்பான குறிப்பு' திரைப்படத் துறையினர் நல வாரிய உறுப்பினர் அட்டை ஆகியவை அச்சடிக்கப்பட்டு வழங்கப்பட்டன.

**இணைய தளத்தில் பதிவுசெய்தல்**

'தமிழரசு' மாத இதழினைத் தற்போது பொதுமக்கள், அரசு அலுவலகங்கள், அரசு நூலகங்களின் வாசகர்கள், அரசியல் கட்சிப் பிரமுகர்கள் அதிக அளவில் வாசிக்கின்றனர். மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும்

போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்கள் தமிழரசு அலுவலகத்திற்கு நேரடியாக வந்து இதழினை வாங்கிச் செல்கின்றனர். புதிய வாசகர்களுக்காகவும், சந்தாதாரர்கள் சந்தாவினைப் புதுப்பித்துக் கொள்ள ஏதுவாகவும் www.tamilarasu.org என்ற இணையதளம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த இணையதளம் வாயிலாகச் சந்தாதாரராகப் பதிவு செய்து தமிழரசு மாத இதழினை அஞ்சல் வழியாகப் பெற்றுக்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், தமிழரசு சந்தாத் தொகையினை வங்கி வரைவோலையாகவோ, பணவிடை மூலமாகவோ "இணை இயக்குநர் (வெளியீடுகள்), தமிழரசு அலுவலகம், இராஜீவ் காந்தி சாலை, கானகம், தரமணி, சென்னை – 600 113" என்ற முகவரிக்குத் தங்களின் பெயர், கதவுஎண். தெருப்பெயர், ஊர், மாவட்டம், அஞ்சல் குறியீட்டு எண், கைப்பேசி எண் ஆகியவற்றைச் சரியாக எழுதி அனுப்பித் தமிழரசு இதழைப் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**அரசு இ–சேவை மையங்களில் பதிவு செய்தால் இல்லம் தேடி வரும் தமிழ்நாடு அரசின் 'தமிழரசு' இதழ்**

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் 580 அரசு இ–சேவை மையங்களிலும் 'தமிழரசு' இதழுக்கான சந்தாத்தொகையினை வழங்கி சந்தாதாரர்களாக சேர வழிவகை செய்யப்பட்டுள்ளது. இ–சேவை மையங்கள் வாயிலாகச் சேரும் சந்தாதாரர்களுக்குத் 'தமிழரசு' இதழ் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது.

தமிழரசு தமிழ், ஆங்கிலம் இதழ்கள் தலா ஒன்றின் விலை ரூபாய் இருபது எனவும், ஆண்டுச்சந்தா ரூபாய் இருநூற்று நாற்பது எனவும், ஆயுள் சந்தா தமிழ் (10 ஆண்டுகள்) ரூபாய் இரண்டாயிரம் எனவும், ஆங்கிலம் (10 ஆண்டுகள்) ரூபாய் இரண்டாயிரத்து நானூறு எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**தமிழரசு சந்தா விவரங்கள்**

| தமிழரசு இதழ் | மொத்த எண்ணிக்கை | 7.5.2021–க்குப் பிறகு சந்தா சேர்க்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| தமிழ் | 31,157 | 12,949 |
| ஆங்கிலம் | 2,224 | 778 |
| **மொத்தம்** | **33,381** | **13,727** |

# தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, 1968ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு அரசின் நலத்திட்ட உதவிகளைப் பொதுமக்களுக்கு எடுத்துச்செல்லும் சிறந்ததொரு பாலமாகச் செயல்பட்டு வருகின்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ளும் அன்றாட நிகழ்ச்சிகள், சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகள், அரசின் அனைத்து நிகழ்ச்சிகளையும் காணொலி மூலம் ஒளிப்பதிவு செய்து, அவற்றைத் தொகுத்து பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வண்ணம், தலைமைச்செயலகத்தின் ஊடக மையத்தின் வழியே, காணொலிச் செய்தி நறுக்குகளாக அரசு, தனியார் தொலைக்காட்சிகளுக்குப் பதிவேற்றம் செய்யப்பட்டு ஒளிபரப்பப்பட்டு வருகின்றன.

இந்நிகழ்ச்சிகளில் முக்கியமானவை பின்னணிக் குரல், இசையுடன் கூடிய செய்தித் தொகுப்புகளாகத் தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், அனைத்து மாவட்டச் செய்தி – மக்கள் தொடர்பு

அலுவலகங்களில் உள்ள மின்னணு விளம்பரத்திரை, சமூக வலைதளங்களிலும் உடனுக்குடன் பதிவேற்றி பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் ஒளிபரப்பப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் முக்கியப் பணிகளாகத் தமிழக அரசின் மக்கள் நலத்திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள், சாதனைகள், அவ்வப்போது சமூகத்தில் நிகழும் முக்கிய நிகழ்வுகள், பேரிடர் காலங்கள், நோய்த் தொற்றுப் பரவலின்போதும் சமூக நலன் குறித்தும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் காணொலிச் செய்தி மலர்கள், குறும்படங்கள், குறும்பாடல்களைத் தற்போது வளர்ந்துள்ள நவீன திரையரங்கப் பதிப்புகளாகத் தயாரித்து அவற்றை அனைத்து டிஜிட்டல் சினிமா திரையரங்குகள், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் உள்ள மின்னணு விளம்பரத் திரை, அனைத்து மாவட்ட செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகங்களில் உள்ள நவீன மின்னணு வாகனத்தின் விளம்பரத்திரை ஆகியவற்றில் ஒளிபரப்பப்பட்டு வருகின்றது.

**சமூக வலைதளம் :**

7.5.2021 அன்று புதிய அரசு பொறுப்பேற்ற பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு அரசால் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளைச் சமூக ஊடகங்களில் இத்துறை சிறப்பாகப் பதிவேற்றம் செய்துவருகிறது. மேலும், அரசு நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒளிப்பதிவு செய்யப்பட்டு பின்னணிக் குரல் மற்றும் இசையமைத்து செய்தித் தொகுப்புகளாக 16.7.2021 முதல் தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் சமூக வலைதளமான வலைக்காட்சி (Tamil Nadu Films Division – YouTube) மூலமாக உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்பட்டு, தமிழகம் மட்டுமல்லாமல் உலக மக்கள் அனைவரிடமும் விரைவாகச் சென்றடையும் விதமாக ஒளிபரப்பப்படுகிறது. முக்கிய காட்சி ஊடகங்கள், சமூக ஊடகங்கள், தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் உள்ளீட்டை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் கொண்டு செல்கிறார்கள். இவ்வரசால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சமூக ஊடகப்பிரிவு, இப்பதிவுகளையும், பின்னூட்டங்களையும் தொடர்ந்து கண்காணித்து அவ்வப்போது தேவைப்படும் மாற்றங்களையும் செய்து வருகிறது. இதுவரை 1057 காணொலிகள் பதிவேற்றம் செய்யப்பட்டு 17,10,660 பார்வையாளர்களால் பார்வையிடப்பட்டுள்ளது.

திரைப்படத் தொழில்நுட்ப மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு குழந்தைகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வுக் குறும்படங்கள் தயாரிக்கப்பட்டு, போட்டி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பரிசுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

4000 வீடியோ கேசட்டுகள் மின்னணு முறையில் பதிவேற்றம் செய்து எண்மிய மின்னணு ஆவணக் காப்பகம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் திரைப்படத் தயாரிப்பு, தொழில்நுட்பக் கல்வி நுணுக்கங்கள் மற்றும் கலை உணர்வுகளையும் பயிற்றுவிக்கும் முதன்மை நிறுவனமாக விளங்கி வருகிறது. இந்நிறுவனத்தில் பலதரப்பட்டத் திரைப்படங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயாரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்பங்களையும் பிற திரைப்படத்துணைப் பாடங்களையும் மாணவர்களுக்குக் கற்றுத்தருவதே முக்கிய இலக்கு ஆகும். தமிழக அரசின் செய்தி – மக்கள் தொடர்புத் துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் இந்நிறுவனம் சென்னை தரமணியில் 15.25 ஏக்கர் நிலப்பரப்பில் செயல்பட்டு வருகிறது.

1945ஆம் ஆண்டு முதல் மத்திய பல்தொழில்நுட்பப் பயிற்சி மையத்தில் ஓர் அங்கமாக இருந்து, 1960ஆம் ஆண்டு ஒரு தனிப் பயிற்சி நிறுவனமாக மாற்றப்பட்டு, தமிழ்நாடு திரைப்படம்

மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் என்ற பெயரில் செயல்பட்டு வந்தது. இந்நிறுவனம், 2006இல் எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் என்றும், 2007 முதல் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் என்றும் அழைக்கப்பெற்றது.

இத்தனிச்சிறப்புக் கொண்ட இந்நிறுவனம் 9.8.2021 முதல் 'தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்' (**Tamil Nadu Government M.G.R. Film and Television Institute**) என்று அழைக்கப்பெறுகிறது.

1964ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6ஆம் தேதி முதல் தற்போது உள்ள வளாகத்தில் 50 ஆண்டுகளையும் கடந்து செவ்வனே சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில் பொன்விழா முகப்பு வளைவும், பாரத ரத்னா டாக்டர். எம்.ஜி.ஆர். அவர்களின் மார்பளவுச் சிலையும் இந்நிறுவன வளாகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே திரைப்பட தொழில்நுட்பக் கல்விக்கென பட்டப் பயிற்சி பயிற்றுவிக்கப்படும் ஒரே நிறுவனமாகத் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் திகழ்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**பட்டப் படிப்புகள்**

அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக்குழு (AICTE) அங்கீகாரத்துடன் கடந்த 50 வருட காலமாக பட்டயப் பயிற்சி அளிக்கப்பட்டு வந்த தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில், 2016–2017 ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலை பல்கலைக்கழகத்துடன் (தற்போதைய தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலை பல்கலைக்கழகம்) இணைந்து நான்காண்டு இளங்கலை காட்சிக்கலை பட்டப்படிப்புகளாக (Bachelor of Visual Arts) மாற்றப்பட்டுப் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் பின்வரும் பட்டப்படிப்புகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | இளங்கலை காட்சிக்கலை (ஒளிப்பதிவு) | – | Bachelor of Visual Arts (Cinematography) |
| 2. | இளங்கலை காட்சிக்கலை (எண்மிய இடைநிலை) | – | Bachelor of Visual Arts (Digital Intermediate) |
| 3. | இளங்கலை காட்சிக்கலை (ஒலிப்பதிவு) | – | Bachelor of Visual Arts (Audiography) |
| 4. | இளங்கலை காட்சிக்கலை (இயக்குதல் மற்றும் திரைக்கதை எழுதுதல்) | – | Bachelor of Visual Arts (Direction and Screenplay Writing) |
| 5. | இளங்கலை காட்சிக்கலை (படத்தொகுப்பு) | – | Bachelor of Visual Arts (Film Editing) |
| 6. | இளங்கலை காட்சிக்கலை (உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன் ) | – | Bachelor of Visual Arts (Animation and Visual Effects) |

**மாணவர்களின் சேர்க்கை**

ஒவ்வொரு கல்வியாண்டிலும், 14 மாணவர்கள் வீதம் ஆறு பாடப்பிரிவுகளுக்கும் 84 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். பட்டப் படிப்புகளுக்குரிய கல்விக் கட்டணமாக ரூபாய் பதினைந்தாயிரமும், சிறப்புக் கட்டணமாக ரூபாய் இரண்டாயிரமும்,

வளர்ச்சிக் கட்டணம் ரூபாய் ஆயிரமுமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், பட்டியல் இனம், பழங்குடியினர் மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம் முழுவதுமாக விலக்களிக்கப்பட்டு வருகிறது.

**மாணவர்கள் தயாரிக்கும் படங்களுக்கு நிதியுதவி**

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் மாணவர்களுக்குக் குறும்படம் தயாரிக்க ரூபாய் ஐம்பதாயிரம் நிதியுதவி வழங்கி வருகிறது. கல்வி இறுதியாண்டில் குறும்படங்கள் தயாரிக்கப்படுவதற்கான பயிற்சி, ஆறு துறைகளிலும் பயிலும் மாணவர்களைக் கொண்ட குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவும் ஒரு குறும்படம் வீதம் 14 குறும்படங்கள் தயாரிக்கத் தேவையான அனைத்துப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

**குறும்பட விருது**

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களால் தயாரிக்கப்படும் குறும்படங்களின் சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த படத்தொகுப்பாளர், சிறந்த படப்பதனிடுபவர் ஆகியோருக்கு வல்லுநர் குழுவால் தேர்வு செய்யப்படும் ‘தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும்

தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்கு குறும்பட விருது' என்ற பெயரில் விருதும், தலா ஒரு பவுன் தங்கப்பதக்கம், நினைவுக் கேடயமும், ரூபாய் ஐந்தாயிரம் ரொக்கப் பரிசும் தமிழக அரசால் வழங்கப்படுகிறது.

**மாணவர்களுக்கு நவீன தொழில்நுட்பத்தில் பயிற்சி**

தற்போதைய நவீன தொழில்நுட்பத்திற்கேற்ப மாணவர்களின் குறும்படங்கள், செயல்முறைப் பயிற்சிக்காக, திரைத்துறைக்கு இணையாக நவீன தொழில்நுட்பக் கருவிகளை வாடகை அடிப்படையில் எடுத்து மாணவர்களுக்குப் பயிற்சி வழங்கும் பொருட்டு, தமிழக அரசால் ஆண்டுதோறும் ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

# திரைப்படம், வீடியோ மற்றும் கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவு

திரைப்படத் துறை பல ஆயிரக்கணக்கான கலைஞர்களுக்கும் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கும் வேலைவாய்ப்பினை வழங்குகிறது. நமது மாநிலத்தின் பெரும்பான்மை மக்களின் முக்கியமான பொழுதுபோக்கு அம்சமாக திரையரங்குகள் உள்ளன. இந்தியாவில் அதிக அளவில் திரைப்படங்கள் தயாரிப்பதில், தமிழ் திரைப்படத் துறையும் ஒன்று ஆகும். இத்துறையின் மூலம் அரசு குறிப்பிடத்தக்க அளவு வருவாய் ஈட்டுகிறது. இத்துறையின் ஒட்டுமொத்த வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் அரசு பல்வேறு மானியங்களையும், சலுகைகளையும் வழங்கிவருகிறது.

மக்களுக்கு முழுமையான பொழுதுபோக்கு அளிக்கும் வகையில் திரைப்படங்களைத் திரையிடுவதில் திரையரங்குகள் முக்கிய பங்காற்றுகின்றன. தமிழ்நாட்டில், 940 திரையரங்குகள் பின்வரும் வகைகளில் இயங்கி வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | நிரந்தரத் திரையரங்குகள் | 886 |
| 2. | பகுதி நிரந்தரத் திரையரங்குகள் | 47 |
| 3. | நடமாடும் திரையரங்குகள் | 5 |
| 4. | திறந்தவெளித் திரையரங்குகள் | 2 |
| | **மொத்தம்** | 940 |

ஒன்றிய அரசு, திரையரங்குகளில் திரைப்படம் திரையிடுவதற்குச் சான்றளிக்கவும், திரையிடுவதை முறைப்படுத்தவும், 1952ஆம் ஆண்டு திரைப்படச் சட்டம் (மத்திய சட்டம் 37/1952) இயற்றியுள்ளது. திரையரங்குகளின் அடிப்படை வசதிகளுடன் கூடிய கட்டட நிலைப்புத்தன்மை, முறையான பராமரிப்பு போன்றவற்றை ஒழுங்குபடுத்தும் பொருட்டு, தமிழ்நாடு அரசு, 1955ஆம் ஆண்டைய தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம் மற்றும் 1957ஆம் ஆண்டைய தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதிகள் ஆகியவற்றை இயற்றியுள்ளது. திரையரங்குகளில் திரைப்படங்கள் வெளியிடுவதற்கு தனியாருக்கு உரிமம் வழங்குவதற்கு 1955ஆம் ஆண்டைய தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம் வழிவகை செய்கிறது. மேற்கண்ட சட்டப் பிரிவுகளின்படி, மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை காவல்துறை ஆணையரும் உரிமம் வழங்கும் அலுவலராக

செயல்படுகின்றனர். 1957ஆம் ஆண்டைய தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதிகளின்படி, நில நிர்வாகத் துறையின் இணை ஆணையர் அவர்கள் மேல்முறையீட்டு அலுவலராகவும், அவரது முடிவைச் சீராய்வு மேற்கொள்ளும் அதிகார அமைப்பாக அரசும் உள்ளனர். மேலும், இந்த விதிகளின் கீழ், திரையரங்குகளுக்கான பார்வையாளர்களின் அனுமதிக் கட்டணத்தை அரசு நிர்ணயிக்கிறது.

**கம்பிவடத் தொலைக்காட்சி கட்டமைப்பு**

கம்பிவடத் தொலைக்காட்சி கட்டமைப்பானது, 1995ஆம் ஆண்டு கம்பிவடத் தொலைக்காட்சி கட்டமைப்புச் (முறைப்படுத்துதல்) சட்டம் (மத்திய சட்டம் 7/1995)–ன் படி கட்டமைக்கப்படுகிறது. இச்சட்டத்தின் 3, 4A, 5, 6, 8 மற்றும் 9 (அல்லது) 10 ஆகிய பிரிவுகளை மீறும் கம்பிவடத் தொலைக்காட்சி இயக்குபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க, அதிகாரம் பெற்ற அலுவலர்களாக மாவட்ட மற்றும் உட்கோட்ட நீதித்துறை நடுவர்கள் மற்றும் அனைத்து மாநகர காவல் துறை ஆணையாளர்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். அதன்படி, மாநிலத்தில், இச்சட்டத்தில் உள்ள நிபந்தனைகள் மற்றும் வழிமுறைகளை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அந்தந்த மாநகரங்களின் மாநகர காவல்துறை ஆணையாளர்களும், மாவட்டங்களைப்

பொறுத்தளவில், மாவட்ட ஆட்சியர்களும், அவரவர் அதிகார வரம்புக்கு உட்பட்ட காவல் எல்லைகளின் உட்கோட்ட அலுவலர்களும் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் ஆவர். இச்சட்டத்தினை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**வீடியோ சட்டமும் விதிகளும்**

வீடியோ கேசட் பதிவுக் கருவிகளைப் பயன்படுத்தி திரைப்படங்களைத் தொலைக்காட்சித் திரைகளில் ஒளிபரப்பு செய்வதை முறைப்படுத்தும் பொருட்டு, 1984ஆம் ஆண்டைய தமிழ்நாடு வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் – கேபிள் மூலமாக தொலைக்காட்சிப் பெட்டித் திரையில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தினை (Tamil Nadu Exhibition of Films on Television Screen through Video Cassette Recorders and Cable Television Networks (Regulation) Act, 1984) மாநில அரசு இயற்றியுள்ளது. வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களை ஒளிபரப்புவதற்கும், வீடியோ நூலகங்கள் அமைப்பதற்கும் தனியர்கள் உரிமம் வழங்கக் கோரும் பட்சத்தில், இச்சட்டம் உரிமம் வழங்குகிறது. மாவட்ட அளவில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களும், சென்னை மாநகரில், காவல்துறை ஆணையாளரும் உரிமம் வழங்கும் அதிகாரிகளாக உள்ளனர்.

**பதிப்புரிமைச் சட்டம்**

ஒன்றிய சட்டமான, 1957ஆம் ஆண்டைய பதிப்புரிமைச் சட்டமானது, படைப்பாளரை அவரது கலைப் படைப்புக்கான முதல் உரிமையாளர் என வரையறுக்கிறது. இச்சட்டம், பதிப்புரிமை பெற்ற உரிமையாளர்களுக்கு அவர்களுடைய கலை படைப்புகளை வானொலி, தொலைக்காட்சியில் ஒலி–ஒளிபரப்பும் ஒவ்வொரு முறையும் உரிமைத் தொகை (Royalty) செலுத்துவதை கட்டாயமாக்குகிறது. பதிப்புரிமை பெற்ற படைப்புகளை ஆராய்ச்சி, கல்வி தொடர்பாக உபயோகிக்கும் மாணவர்களுக்கு இச்சட்டம் விலக்கு அளிக்கிறது. 1957ஆம் ஆண்டைய பதிப்புரிமைச் சட்டமானது, திருட்டு வீடியோ நாடாக்கள் சம்பந்தமான குற்றங்கள், திரைப்படம், இசை, இதர வகைகளின் பதிப்புரிமை சட்ட விதிமீறல்களைக் கட்டுப்படுத்துவதற்கு காவல்துறை அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்குகிறது. இச்சட்டப்பிரிவு 64–ன் படி, குற்றச்செயல்கள் தொடர்புடைய பொருட்களை, உதவி ஆய்வாளர் படி நிலைக்குக் குறையாத காவல் அலுவலர்கள் தேடி கைப்பற்றுகை செய்திடலாம். சட்டப்பிரிவு 51–ன் கீழ் பதிப்புரிமைகளாகக் கூறப்படுபவை மீறப்படுவது, பிரிவு 63–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் ஆகும். இது ஆறு மாதங்களுக்குக் குறையாத – மூன்று

ஆண்டுகள்வரை நீட்டிக்கக்கூடிய சிறை தண்டனையும், ரூபாய் ஐம்பதாயிரத்திற்குக் குறையாத – ரூபாய் இரண்டு இலட்சம் வரை அபராதமும் விதிக்கத்தக்க குற்றமாக அமையும். இரண்டாவது தடவையும் அதற்கடுத்த இவ்வகையான ஒவ்வொரு குற்றத்திற்கும் கூடுதல் தண்டனையாக ஒரு ஆண்டிற்குக் குறையாமலும் மூன்று ஆண்டுகள்வரை நீட்டிக்கக்கூடிய சிறைத் தண்டனையும், ரூபாய் ஒரு இலட்சத்திற்குக் குறையாத – ரூபாய் இரண்டு இலட்சம் வரையிலும் அபராதம் விதிக்க இச்சட்டத்தின்மூலம் வகைசெய்யப்படுகிறது. சட்டப்பிரிவு 52–(அ)–ல் விவரிக்கப்பட்டுள்ளவாறு ஒலிப்பதிவு நாடா மற்றும் காணொலி படம் ஆகியவற்றில் சேர்க்கப்பட வேண்டிய விவரங்களில், ஏதேனும் விதிமீறல் இருப்பின், அதற்கு, சட்டப்பிரிவு 68(அ)–ன் கீழ் மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை, அபராதம் விதிக்கப்படும்.

**அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவு**

குற்றப்பிரிவு, குற்றப்புலனாய்வுத் துறையில் அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவின் தலைவர் காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநர் (குற்றம்) ஆவார். இவருக்கு உதவியாக மாநில அளவில் ஒரு காவல் கண்காணிப்பாளர், ஒரு காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோர்

செயல்படுகின்றனர். 1957ஆம் ஆண்டு பதிப்புரிமைச் சட்டம் மற்றும் 2000ஆம் ஆண்டு தகவல் தொழில் நுட்பச் சட்டம் ஆகியவை தொடர்பான சட்ட விதி மீறல்களைத் தடுக்கவும் மேற்படி அமலாக்கப்பிரிவு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மாநிலத்தில், சென்னை (2), புனித தோமையார் மலை (1), வேலூர் (1), சேலம் (1), கோயம்புத்தூர் (1), திருச்சி (1), கடலூர் (1), மதுரை (1), திண்டுக்கல் (1), விருதுநகர் (1), திருநெல்வேலி (1) ஆகிய பன்னிரண்டு இடங்களில் இப்பிரிவின் அலகுகள் இயங்கிவருகின்றன.

**கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவில் சட்டவிரோதமாகப் புதிய தமிழ் திரைப்படங்களை ஒளிபரப்பு செய்தவர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகள்**

மாநிலத்தில், பன்னிரண்டு ஆயிரத்திற்கும் அதிகமான கம்பிவடத் தொலைக்காட்சி இயக்குபவர்கள் உள்ளனர். மேலே சொல்லப்பட்டுள்ள அமலாக்கப் பிரிவினர் கம்பிவடத் தொலைக்காட்சி இயக்குபவர்கள் பதிப்புரிமை மீறல் குறித்த சரியான விவரங்களை சேகரித்து, அதற்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவில் புதிய திரைப்படங்கள் சட்ட விரோதமாக திரையிடப்படுவதாக திரைப்பட தயாரிப்பாளர்கள், பதிப்புரிமைப் பெற்றவர்கள்

அளித்த புகாரின் அடிப்படையில் தமிழகம் முழுவதும் தீவிர சோதனைகள் நடத்தப்பட்டு, பதிப்புரிமைச் சட்டத்தை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கடலூர் அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவினரால் ஆறு வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு, மூன்று குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைப்பற்றப்பட்டுள்ள ஒளிபரப்பு சாதனங்களின் மதிப்பு ரூபாய் முப்பத்தி மூன்றாயிரத்து அறுநூறு ஆகும். அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவினால் 148 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு, ரூபாய் அறுபத்தி ஒன்பது இலட்சத்து இரண்டாயிரத்து எண்ணூற்று நாற்பத்தி எட்டு மதிப்பிலான சாதனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

**2022ஆம் ஆண்டிற்கான புதிய முயற்சிகள்**

அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப்பிரிவின் அலகு அலுவலர்களும், தலைமையிட அதிகாரிகளும் குற்றவாளிகளின் நடவடிக்கைகளை தொடந்து கண்காணித்து வருகின்றனர்.

திரையரங்கத்தில் திரையிடப்படும் புதிய திரைப்படங்களைச் சட்டவிரோதமாக வீடியோ கேமரா மூலம் பதிவுசெய்து திருட்டு வீடியோக்களை (Pirated DVDs) வெளியிடும் திரையரங்க உரிமையாளர்கள்,

இயக்குபவர்கள் (Operators) மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திருட்டு வீடியோ குறுந்தகடுகள் விற்பனையைத் தவிர்க்கும் பொருட்டு, அனைத்து வீடியோ கடை உரிமையாளர்களுக்கு அறிவுரை வழங்கும் பொருட்டு காலமுறை கலந்துரையாடல் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. உரிய உரிமம் இல்லாமல் புதிய திரைப்படங்களை சுற்றுலா பேருந்துகளில் திரையிடுவதைத் தடுக்க, அடிக்கடி சோதனைகள் நடத்தப்பட்டு, சுற்றுலா பேருந்துகளை இயக்குபவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வெளிநாட்டிலிருந்து கடத்திவரப்படும் திருட்டு வீடியோ குறுந்தகடுகளின் நடமாட்டத்தை தடுக்க, விமானம், சுங்கத்துறை அதிகாரிகளுடன் இணைந்து செயலாற்றி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உரிமம் பெறாமல், சட்டத்திற்கு புறம்பாக புதிய திரைப்படங்களை ஒளிபரப்பு சாதனங்கள் மூலம் கம்பிவடத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்யும் கம்பிவடத் தொலைக்காட்சி இயக்குவோர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப்பிரிவினரின் தொழில்நுட்பத் திறனை மேம்படுத்தி சிறப்பான

செயல்திறனை வெளிப்படுத்துவதற்காக, அலகு அலுவலர்களுக்கு அறிவுசார் சொத்துரிமை பிரதிநிதிகள், இந்திய இசைத்தொழில் பிரதிநிதிகள், திரைப்பட ஒளிப்பதிவு பிரிதிநிதிகள் மூலம் தலைமையிடத்தில் தொழில்நுட்பம் சார்ந்த சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.

அறிவு சார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவினால் 2017ஆம் ஆண்டு முதல் 2022 (31.01.2022)ஆம் ஆண்டுவரை பதிவு செய்யப்பட்ட வழக்குகள், கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை, கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் மதிப்பு முதலிய விவரங்கள் பின்வருமாறு :–

| வருடம் | பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | கைது செய்யப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை | கைப்பற்றப் பட்ட சொத்தின் மதிப்பு (ரூபாய்) | கேபிள் தொலைக் காட்சி நடத்துபவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2017 | 5589 | 5591 | 51,24,96,880 | 13 |
| 2018 | 3102 | 3076 | 8,85,28,841 | 29 |
| 2019 | 762 | 710 | 3,37,19,738 | 18 |
| 2020 | 292 | 297 | 1,16,13,631 | 35 |
| 2021 | 151 | 151 | 63,40,428 | 5 |
| 2022 (31.01.22 வரை) | 3 | 3 | 5,96,020 | – |
| **மொத்தம்** | **9899** | **–** | **–** | **100** |

# திரைப்படத்துறையினர் நலவாரியம்

அகில இந்தியத் திரைப்படத் தொழிலாளர்கள் மாநாட்டில் அப்போதைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 9.10.2009 அன்று உரையாற்றியபோது, ‘தொழிலாளர் சமுதாயத்தின் நலன்களை உறுதிப்படுத்திடும் வகையில், அரசின் சார்பில் பல்வேறு அமைப்புசாராத் தொழிலாளர் நலவாரியங்கள் உருவாக்கப்பட்டு, அந்த வாரியங்களின் மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில், தமிழ்த் திரையுலக வளர்ச்சியிலும், அதன் வாழ்விலும் பல்வேறு நிலையில் தங்கள் உழைப்பை நாளும் அளித்திடும் கலையுலகத்தினரின் நலன்களுக்காகத் தனி நலவாரியம் அமைக்கப்பட வேண்டுமெனத் தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார்பிலும் தமிழ்த் திரையுலகின் சார்பிலும் அளிக்கப்பட்டுள்ள கோரிக்கையினை ஏற்று தமிழ்நாடு அரசு சின்னத் திரையினருக்கும் சேர்த்து திரைப்படத்துறையினர் நலவாரியம் ஒன்றினைப் புதிதாக உருவாக்கும்’ என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பின் தொடர்ச்சியாக திரைப்படத் துறையினர் நலவாரியத்தில் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் தலைவராகவும், இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்பு அவர்கள் உறுப்பினர் – செயலாளராகக் கொண்டு திரைப்படத் துறையினர் நலவாரியம் அமைக்கப்பட்டது.

## அலுவல்சார்ந்த உறுப்பினர்கள்

தமிழ் வளர்ச்சி – செய்தித் துறைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர், வருவாய் – பேரிடர் மேலாண்மைத் துறைச் செயலாளர், தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத் துறைச் செயலாளர், வணிகவரித் துறை ஆணையர், உள் துறைத் துணைச் செயலாளர் (சினிமா), தொழிலாளர் நலத்துறை ஆணையர், நில நிருவாகத் துறை ஆணையர் ஆகிய எட்டு அரசு உயர் அலுவலர்கள் அலுவல்சார்ந்த உறுப்பினர்களாக உள்ளனர்.

திரைப்படத்துறைச் சார்ந்த அலுவல்சாரா உறுப்பினர்களும் நியமனம் செய்யப்படுகின்றனர்.

இந்நலவாரியத்தில், தற்போது 39 சங்கங்களைச் சார்ந்த திரைப்பட, சின்னத்திரைத் தொழிலாளர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் உறுப்பினர்களாகச்

சேர்ந்துள்ளனர். இந்நலவாரியத்தில் தற்போது 26,792 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

திரைப்படத்துறை, சின்னத்திரையின் படைப்பாக்கத்தில் பங்கேற்றுப் பணியாற்றும் பல்வேறு சங்கங்களைச் சார்ந்த உறுப்பினர்களுக்குக் கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை, கருக்கலைப்பு மற்றும் கருச்சிதைவு உதவித்தொகை, மூக்குக்கண்ணாடி உதவித்தொகை, விபத்து ஈட்டுறுதித் திட்டம், இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை, ஈமச்சடங்கு உதவித்தொகை போன்ற பல்வேறு நலத்திட்டங்கள் வாயிலாக உதவிகள் வழங்கப்படுகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | நலத்திட்ட உதவி | உதவித் தொகை (ரூபாய்) |
|---|---|---|
| **அ. கல்வி உதவித்தொகை** | | |
| 1 | 10 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000 |
| 2 | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற பெண் குழந்தைகளுக்கு | 1,000 |
| 3 | 12 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | 1,500 |
| 4 | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் (இரு பாலருக்கும்) | 1,500 |

| வ. எண் | நலத்திட்ட உதவி | உதவித் தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 5 | முறையான பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு (இரு பாலருக்கும்) | 1,500 |
| 6 | விடுதி வசதியுடன் முறையான பட்டப்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 1,750 |
| 7 | முறையான பட்ட மேற்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 2,000 |
| 8 | விடுதி வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 3,000 |
| 9 | தொழிற்கல்வி பட்டப்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 2,000 |
| 10 | விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டப்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 4,000 |
| 11 | தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு (இரு பாலருக்கும்) | 4,000 |
| 12 | விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 6,000 |
| 13 | ஐ.டி.ஐ. தொழில் பயிற்சி அல்லது பலவகைத் தொழில் பயிற்சிப் படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 1,000 |
| 14 | விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது பலவகைத் தொழில் பயிற்சிப் படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 1,200 |
| ஆ. | திருமண உதவித்தொகை | 2,000 |

| வ. எண் | நலத்திட்ட உதவி | உதவித் தொகை (ரூபாய்) |
|---|---|---|
| இ. | மகப்பேறு உதவித்தொகை | 6,000 |
| ஈ. | கருக்கலைப்பு / கருச்சிதைவு உதவித்தொகை | 3,000 |
| உ. | மூக்குக் கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | 500 |
| ஊ. | **விபத்து ஈட்டுறுதித் திட்டம்** | |
| 1 | விபத்தினால் ஏற்படும் மரணம் | 1 இலட்சம் |
| 2 | விபத்தினால் ஏற்படும் ஊனம் ஊனத்தின் தன்மைக்கேற்ப | 10,000 முதல் 1 இலட்சம் வரை |
| எ. | இயற்கை மரணம் உதவித்தொகை | 15,000 |
| ஏ. | ஈமச் சடங்கு உதவித்தொகை | 2,000 |

நலவாரியத்தால் வழங்கப்படும் திட்டத்தின் மூலம் திரைப்படத்துறை, சின்னத்திரை ஆகியவற்றைச் சேர்ந்த சங்கங்களின் உறுப்பினர்களில் பயன்பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை, அவர்களுக்கு ஆண்டுவாரியாக வழங்கப்பட்ட மொத்த உதவித் தொகை விவரம் பின்வருமாறு:

| வ.எண் | வழங்கப்பட்ட ஆண்டு | மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 2011 | 38 | 1,98,000/− |
| 2 | 2013 | 728 | 21,39,000/− |
| 3 | 2014 | 303 | 8,00,000/− |
| 4 | 2016 | 277 | 8,00,250/− |
| 5 | 2017 | 259 | 9,41,500/− |
| 6 | 2018 | 449 | 13,61,250/− |
| 7 | 2019 | 205 | 7,20,000/− |
| 8 | 2020 | 141 | 5,28,500/− |
| 9 | 2021 | 226 | 8,64,500/− |
| | **மொத்தம்** | **2,626** | **83,53,000/−** |

01.01.2021 முதல் 31.12.2021 வரை 222 உறுப்பினர்களிடமிருந்து ரூபாய் பனிரெண்டு இலட்சத்து ஆறாயிரத்து இருநூற்று ஐம்பதுக்கான நலத்திட்ட உதவிகள் கோரி விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இவ்வாரியத்தின் வாயிலாகப் பெறப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் நலவாரியக் குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு, பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

# திரைப்பட விருதுகள், மானியம் மற்றும் சின்னத்திரை விருதுகள்

## திரைப்பட விருதுகள்

திரைப்படங்கள் அனைத்துத் தரப்பினரையும் வெகு எளிதில் சென்றடைந்திடும் ஒரு வலிமை வாய்ந்த சாதனமாகும். தமிழ்நாடு அரசால் 1968ஆம் ஆண்டு முதல் சமுதாய சிந்தனைகளுடன் கூடிய மனித நல்லுணர்வுகளைப் பிரதிபலிக்கும் தரமான திரைப்படங்களைத் தயாரித்திட ஊக்கப்படுத்தும் வகையில், சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், சிறந்த நடிகர், சிறந்த நடிகையர் மற்றும் சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களுக்குத் திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சிறந்த திரைப்படங்கள், சிறந்த நடிகர்கள், சிறந்த நடிகையர், சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களைத் தேர்வுசெய்து விருதுகளை வழங்குவதற்கு தமிழ்நாடு அரசால் தேர்வுக்குழு அமைக்கப்பட்டு, இத்தேர்வுக்குழு தேர்ந்தெடுத்துப் பரிந்துரைக்கும் சிறந்த திரைப்படங்களுக்கு முதல் பரிசாக ரூபாய் இரண்டு

இலட்சம், இரண்டாம் பரிசாக ரூபாய் ஒரு இலட்சம், மூன்றாம் பரிசாக ரூபாய் எழுபத்தைந்தாயிரம், சிறப்புப் பரிசாக ரூபாய் எழுபத்தைந்தாயிரம் ரொக்கமாக வழங்கப்படுவதோடு, நினைவுப்பரிசுகள், சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், மகளிரைப் பற்றி உயர்வாகச் சித்திரிக்கும் திரைப்படத்திற்குச் சிறப்புப் பரிசாக ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் ரொக்கம், நினைவுப்பரிசும் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த நடிகர் (சிறப்புப்பரிசு), சிறந்த நடிகை (சிறப்புப்பரிசு), சிறந்த வில்லன் நடிகர், சிறந்த நகைச்சுவை நடிகர், சிறந்த நகைச்சுவை நடிகை, சிறந்த குணச்சித்திர நடிகர், சிறந்த குணச்சித்திர நடிகை, சிறந்த இயக்குநர், சிறந்த கதை ஆசிரியர், சிறந்த உரையாடலாசிரியர், சிறந்த இசையமைப்பாளர், சிறந்த பாடலாசிரியர், சிறந்த பின்னணிப் பாடகர், சிறந்த பின்னணிப் பாடகி, சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த திரைப்படத் தொகுப்பாளர், சிறந்த கலை இயக்குநர், சிறந்த சண்டைப்பயிற்சியாளர், சிறந்த நடன ஆசிரியர், சிறந்த ஒப்பனைக் கலைஞர், சிறந்த தையற்கலைஞர், சிறந்த குழந்தை நட்சத்திரம், சிறந்த பின்னணிக்குரல் கொடுப்பவர் (ஆண்) மற்றும் சிறந்த பின்னணிக்குரல்

கொடுப்பவர் (பெண்) ஆகியோருக்கு தலா ஐந்து பவுன் தங்கப்பதக்கம், நினைவுப்பரிசும் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

கடந்த சில ஆண்டுகளாக திரைப்படத் துறையினருக்கான விருதுகள் வழங்கப்படவில்லை. இவ்விருதுகளை விரைந்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**கலைத்துறை வித்தகர் விருதுகள்**

தமிழ்த்திரை உலகில் தமது எழுத்தாலும், நடிப்பாலும் தனி முத்திரை பதித்த பேரறிஞர் அண்ணா, சிரிப்பின் மூலம் மக்களைச் சிந்திக்க வைத்த கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், மக்கள் மனம் கவர்ந்த ஏழிசை மன்னர் தியாகராஜ பாகவதர், உழைப்பால் உயர்ந்து விளங்கிய நடிகர் ராஜாசாண்டோ, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், நடிப்பிற்கே இலக்கணமாகத் திகழ்ந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன், காலத்தால் அழியாத பாடல்கள் படைத்த கவியரசர் கண்ணதாசன், மேனாள் முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா ஆகியோரின் பெயர்களில் ‘கலைத்துறை வித்தகர் விருதுகள்’ தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்விருதுகளைப் பெறுகின்ற கலைத்துறை

வித்தகர்களுக்கு, தலா ஐந்து பவுன் தங்கப்பதக்கமும், நினைவுப்பரிசும் வழங்கப்படுகின்றன.

**அரசு திரைப்பட மானியம்**

நல்ல கருத்துகளைத் தெரிவிக்கும் வகையிலும், சமுதாய விழிப்புணர்வுமிக்க திரைப்படங்களைத் தரமாகவும், சிறிய முதலீட்டிலும் தயாரித்து வெளியிடுவோரை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்கும் திட்டத்தினை, தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டுள்ள தேர்வுக் குழுவின் வாயிலாக, குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்கள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு திரைப்படத்திற்கும் இத்திட்டத்தின் வாயிலாக ரூபாய் ஏழு இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

2007ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரை குறைந்த செலவில் தயாரித்து வெளியான தரமான 149 தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு அரசு மானியம் தலா ரூபாய் ஏழு இலட்சம் வீதம் ரூபாய் பத்து கோடியே நாற்பத்து மூன்று இலட்சத்திற்கான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.

**சின்னத்திரை விருதுகள்**

இல்லத்தரசிகளின் பொழுதுபோக்கில் மிகப்பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ள சின்னத்திரையில் ஒளிபரப்பாகும் நெடுந்தொடர்கள் அதில் பங்கேற்கும் நடிகர், நடிகையர், தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும், தமிழ்நாடு அரசின் சார்பில், சின்னத்திரை விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சிறந்த நெடுந்தொடருக்கு முதல் பரிசாக ரூபாய் இரண்டு இலட்சம், இரண்டாம் பரிசாக ரூபாய் ஒரு இலட்சம் ரொக்கத்துடன் நினைவுப்பரிசும் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமின்றி, சிறந்த கதாசிரியர், சிறந்த திரைக்கதை ஆசிரியர், சிறந்த உரையாடல் ஆசிரியர், சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த படத் தொகுப்பாளர், சிறந்த கதாநாயகன், சிறந்த கதாநாயகி, சிறந்த குணச்சித்திர நடிகர், சிறந்த குணச்சித்திர நடிகை, சிறந்த வில்லன் நடிகர், சிறந்த வில்லி நடிகை, சிறந்த குழந்தை நட்சத்திரம், சிறந்த பின்னணி இசையமைப்பாளர், சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (ஆண்) சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (பெண்) மற்றும் சிறந்த தந்திரக் காட்சியாளர் எனச் சின்னத்திரையில் சிறந்து விளங்குவோர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குத்

தலா மூன்று பவுன் தங்கப் பதக்கமும், நினைவுப்பரிசும், சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

மேலும், ஆண்டின் சிறந்த சாதனையாளர், சிறந்த வாழ்நாள் சாதனையாளராகத் தேர்வு செய்யப்படுவோருக்கு தலா ரூபாய் ஒரு இலட்சம் ரொக்கமும், நினைவுப்பரிசும், சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

கடந்த சில ஆண்டுகளாக சின்னத்திரை விருதுகள் வழங்கப்படாமல் உள்ளன. அவற்றை விரைந்து வழங்குவதற்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**சர்வதேசத் திரைப்பட விழாவிற்கு நிதியுதவி**

சென்னையில் 2008 முதல் 2022 வரை நடைபெற்ற சர்வதேசத் திரைப்பட விழாக்களுக்கு தமிழக அரசின் சார்பில் ரூபாய் ஆறு கோடியே எழுபத்தைந்து இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்கள் விருதுகள்**

2008 – 2009 ஆம் கல்வியாண்டு முதல் 2013–2014 ஆம் கல்வியாண்டு வரையிலான பதினெட்டு குறும்படங்களைப் பார்வையிட்டு, ஆண்டு ஒன்றிற்கு ஐந்து விருதுகள் என ஆறு ஆண்டுகளுக்கு முப்பது விருதாளர்களை தேர்வுக்குழுவினர் தமிழக அரசுக்குப் பரிந்துரை செய்ததன் அடிப்படையில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் மாணவர்கள் தயாரித்த குறும்படங்களைப் பார்வையிட்டு சிறந்த குறும்படங்களைத் தெரிவுசெய்து மாணவர் விருதுகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# நிறைவுரை

**"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்**
**திண்ணியர் ஆகப் பெறின்".**

(குறள்–666)

எண்ணியவற்றை, எண்ணியவாறே செயல்படுத்துவதில் மன உறுதியோடு செயலாற்றும் வலிமை பெற்றவரே வெற்றிகாண்பார் என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழர் நலம் காப்பதிலும், சமூகநீதி, சமத்துவத்தை நிலைநிறுத்துவதிலும், உரிமையை வலியுறுத்துவதிலும், தனித்தன்மையுடன் திட்டங்களை வகுத்து அதனை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறார்.

தமிழக மக்களின் நலன் ஒன்றையே தன்னுடைய நலனாக எண்ணி, அல்லும் பகலும் அயராது ஓய்வின்றி உழைக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசின் ஒப்பற்றப் பணிகளையும், திட்டங்களையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் அரும்பணியை செய்தி – மக்கள் தொடர்புத் துறை எவ்வித தொய்வுமின்றி செவ்வனே தொடரும்.

**மு.பெ.சாமிநாதன்**
செய்தித் துறை அமைச்சர்

**இணைப்பு–1**

**வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2022–2023**

**தொகை**
**(ரூபாய் ஆயிரத்தில்)**

| | **2020–2021 கணக்குகள்** | **2021–2022 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு** | **2021–2022 திருத்த மதிப்பீடு** | **2022–2023 வரவு செலவுத் திட்டமதிப்பீடு** |
|---|---|---|---|---|
| 2059 பொதுப்பணிகள் | 1,03,92 | 2,19,01 | 2,33,99 | 2,29,66 |
| 2205 கலையும் பண்பாடும் | ... | ... | ... | 12,29 |
| 2220 செய்தி மற்றும் விளம்பரம் | 98,05,24 | 144,08,95 | 130,07,59 | 125,28,16 |
| 2230 தொழிலாளர் வேலை வாய்ப்பு மற்றும் திறன் மேம்பாடு | ... | ... | ... | 35,35 |
| 2235 சமூகப் பாதுகாப்புப் நலனும் | 3,12,11 | 4,45,61 | 5,14,21 | 2,11,81 |
| 2250 ஏனைய சமூகப் பணிகள் | 12,90 | 14,15 | 14,15 | 16,09 |
| 4202 கல்வி, போட்டி விளையாட்டு, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு | 67,88,60 | 1 | 1 | 1 |
| **மொத்தம்** | **17,02,277** | **15,08,773** | **13,76,995** | **13, 03,337** |




மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், வீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின்
திருவுருவப் படத்திற்கு, மலர் தூவி மரியாதை
(சென்னை, 11.7.2021).



மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன் அவர்கள்
காந்தி மண்டபத்தில் ஆய்வு (சென்னை, 14.7.2021).



மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன் அவர்கள்
தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில்
ஆய்வு (சென்னை, 29.7.2021).




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள்
கொரோனா பிரச்சார வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்தல்.
(சென்னை, 31.7.2021)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள்
தமிழரசு இதழின் சிறப்பு வெளியீட்டினை வெளியிடுதல்.
(சென்னை, 19.8.2021)




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள்
வ.உ.சிதம்பரனார் அவர்களின் திருவுருவப் படத்திற்கு
மலர் தூவி மரியாதை (சென்னை, 5.9.2021).



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள்
தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை
(சென்னை, 17.9.2021).




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள்
வ.உ.சிதம்பரனார் அவர்களின் 150வது பிறந்த நாளை முன்னிட்டு,
நகரும் புகைப்படக் கண்காட்சி பேருந்தினை கொடியசைத்து தொடங்கி வைத்தல்
(சென்னை, 1.11.2021).



மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன் அவர்கள்
புதுதில்லியில், இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில்,
தமிழ்நாடு அரங்கினைப் பார்வையிடல் (புதுதில்லி, 16.11.2021).



மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன் அவர்கள்
மகாகவி பாரதியார் அவர்களின் திருவுருவப் படத்திற்கு
மலர் தூவி மரியாதை (சென்னை, 11.12.2021).



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள்
திருவள்ளுவர் திருநாளன்று அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு
மலர் தூவி மரியாதை (சென்னை, 15.1.2022).



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் மொழிப்போர் தியாகிகள் தினத்தன்று அவர்களது திருவுருவப் படங்களுக்கு மலர் தூவி மரியாதை (சென்னை, 25.1.2022).




குடியரசு நாள் விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.ஆர்.என். ரவி அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் "விடுதலைப் போரில் தமிழகம்" என்ற தலைப்பில் வடிவமைக்கப்பட்ட அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பினை பார்வையிடல். (சென்னை, 26.01.2022).




குடியரசு நாள் விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.ஆர்.என். ரவி அவர்கள்,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் மற்றும்
முக்கியப் பிரமுகர்கள் "விடுதலைப் போரில் தமிழகம்" என்ற தலைப்பில்
வடிவமைக்கப்பட்ட அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பினை
பார்வையிடல் (சென்னை, 26.01.2022).



குடியரசு நாள் விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.ஆர்.என். ரவி அவர்கள்,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் மற்றும்
முக்கியப் பிரமுகர்கள் "விடுதலைப் போரில் தமிழகம்" என்ற தலைப்பில்
வடிவமைக்கப்பட்ட அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பினை
பார்வையிடல் (சென்னை, 26.01.2022).




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள்
குடியரசு நாள் விழாவில் பங்கேற்ற ஊர்திகளை மாவட்டங்களில்
காட்சிப்படுத்தும் பொருட்டு கொடியசைத்து துவக்கி வைத்தல்
(சென்னை, 26.01.2022).



குடியரசு நாள் விழாவில் பங்குபெற்ற அலங்கார ஊர்தியினை
மலர்தூவி வரவேற்றல் (திருவண்ணாமலை, 17.02.2022).



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள்
குடியரசு நாள் விழாவில் கலந்து கொண்ட அலங்கார ஊர்திகளை பார்வையிடும்
மாணவ / மாணவியர்களிடம் கலந்துரையாடல் (சென்னை, 21.02.2022).

"நமது மாநிலத்தின் மகத்தான வளங்களை
முழுமையாகப் பயன்படுத்தி அதன் வாயிலாகத்
தொழில் வளர்ச்சியைச் சிறப்புற உயர்த்தி
மக்கள் அனைவருக்கும் நிகழ்காலத்திலும்,
எதிர்காலத்திலும் ஒரு சிறப்பான வாழ்க்கை நிலையை
ஏற்படுத்திடவேண்டுமென்பதே
அரசினுடைய இலட்சியம்"

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

©
தமிழ்நாடு அரசு
2022

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை-600 001.